பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 28 வியாழக்கிழமை (10.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 136

## நாடாளுமன்றில் சம்பந்தன் காட்டம்

# கிழக்கை அரசு முழுமையாக இராணுவ மயமாக்குகிறது!

## கருணாவின் கதி விரைவில் பிள்ளையானுக்கும்



கொழும்பு,ஏப்ரல்10

கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் முழுமையாக இராணுவமயமாக்கி வருகிறது. அதனைத் தம்வசப்படுத்துவதே சிங்கள இனவாதிகளினது நோக்கமாகும். அதற்காகவே, ஆயுதக் குழுக்களை அரசாங்கம் பயன்படுத்துகிறது.

பிள்ளையான் குழுவின் ஆதரவோடு கிழக்குத் தமிழ்மக்களின் வாக்குகளைப் பறித்து அவற்றைத் தமிழ் மக்கள் இந்த அரசுக்கு அளித்த ஆதரவாக சர்வதேசத்துக்குக் காட்டுவதற்கு அரசு முற்படுகிறது.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு காட்டமாக நேற்று நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்.

அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் தெரியாமல் கருணாவைப் போலவே பிள்ளையானும் பலிக்கடாவாகப் போகிறார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாணம் முற்றுமுழுதாக இராணுவ மயப்படுத்தப்பட்டு வருகின்றது. கிழக்கினை வசப்படுத்துவதே சிங்கள இனவாதிகளின் நோக்கமாகும். அதற்காகவே

(12ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை தாக்குதலில் கட்டளைத் தளபதி காயம்

கொழும்பு,ஏப்.10

வவுனியா, மன்னார் மற்றும் மணலாறுப் பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் மற்றும் சினைப்பர் தாக்குதலில் இராணுவக் கட்டளைத்தளபதி ஒருவர் உட்பட 7 படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

மோதல்களின்போது 11 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 20பேர் படுகாயமடைந்துள்ளனர் என தேசிய பாதுகாப்புக்கான மத்திய நிலையம் தெரிவித்தது. (12ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கிக் குண்டுத் தாக்குதலில் மீனவர் ஒருவர் யாழ்.குடாக்கடலில் நேற்றுப் பலியானார்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.குடாக்கடலில் நேற்று முற்பகல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களில் ஒருவர் பீரங்கித் குண்டுத் தாக்குதலால் உயிரிழந்தார்.

மீனவர்கள் மத்தியில் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்ததில் குருநகரைச் சேர்ந்த துரை சாந்தன் (வயது 21) என்பவரே மரணமானவர் ஆவார்.

கொழும்புத்துறை பள்ளிமுனைக் களப்புப் பகுதியில் சிறையா வலைத் தொழில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நால்வரில் ஒருவரானதுரை சாந்தன் பீரங்கிக் குண்டு பட்டு அந்த இடத்திலேயே மரணமானதாகச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.மேலதிக நீதிவான் எஸ்.வசந்தசேனன் குருநகர் இறங்குதுறையில் வைத்து விசாரணை நடத்தினார்.

மீன்பிடிக்கத்தடைவிதிக்கப்பட்ட பகுதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏற்றுமதி வரிச்சலுகைகளைப் பெறுவதற்காக இறைமையை விட்டுக்கொடுக்க மாட்டோம்!

### ஜனாதிபதி மஹிந்த சூளுரை

கொழும்பு,ஏப்.10

'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகைகளைப் பெறுவதற்கு இலங்கை தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும். எனினும், தனது இறைமையை அது விட்டுக்கொடுக்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 'ஜி.எஸ்.பி.' ஏற்றுமதி வரி விலக்குச் சலுகை இலங்கைக்கு மீளக் கிடைப்பதை உறுதி செய்வதற்காக அரசு சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதே வேளை உள்ளூர் உற்பத்தியாளர்கள் இவ்வாறான சலுகைகள் அற்ற நிலையிலும் தமது ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கான் வழிவகைகளையும் உபாயங்களையும் தேடவேண்டும் -

ஐரோப்பிய ஒன்றியத்தின் சில சலுகைகளை இழக்கும் நிலை தோன்றினால் இலங்கையின் தனியார் துறை சவாலை எதிர்கொண்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமெனவும்-(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவன்ஸவை இதுவரை விலக்கவில்லை ஆனால் இனி ஒழுக்காற்று நடவடிக்கை!

### ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அறிவிப்பு

கொழும்பு,ஏப்.10

''எமது ஜே.வி.பி. கட்சியைப் பிளவுபடுத்தும் வகையில் கட்சியைவிட்டு விலகி நின்று பகிரங்கமாகக் கருத்து வெளியிடும் விமல் வீரவன்ஸவுக்கு எதிராகப் பண்மோசடி உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. 'ஆனால் நாம் இதுவரை அவரைக் கட்சியிலிருந்து விலக்கும் முடிவு எதனையும் எடுத்திருக்கவில்லை. ஆனால் இனிமேல் அவர் மீதும், அவரைப் போன்று செயற்பட்ட பிற கட்சி உறுப்பினர்கள் மீதும் நிச்சயம் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்.''

- இவ்வாறு அறிவித்திருக்கின்றார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

கொழும்பில் நேற்றுத் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டபோதே ஜே.வி.பி.தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இப்படித் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-



கட்சியைப் பிளவுபடுத்தும் வகையில் தம்பாட்டில் கட்சியை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார் வீரவன்ஸ. நாம் அவரைக் கட்சியில் இருந்து விலக்கவில்லை.

அவருக்கு எதிராகக் கட்சிக்குள் பல்வேறு மோசடிக் குற்றச்சாட்டுக்களும் முன் வைக்கப்பட்டுள்ளன. எனினும், நாம் அவரைக் கட்சியிலிருந்து விலக்குவதற்கு எண்ணம் கொண்டிருக்கவில்லை.

ஆனால் கட்சியைப் பிளவுபடுத்திக் கட்சியின் அங்கத்தவர்களையும் திசை திருப்ப அவர் நடவடிக்கை மேற்கொள்கிறார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

*5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவ மணிகளுக்கு உதயன் வருடந்தோறும் வழங்கும் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் உள்ளே 7ஆம் பக்கத்தில்*

## இன்று துக்கதினம்

கொழும்பு,ஏப்.10

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் இறுதிச் சடங்குகள் நடைபெறும் இன்றைய தினம் துக்கதினமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (சி)

## புலிகளை முற்றாகவே அரசு தோற்கடிக்கும்!

### நாடாளுமன்றில் பிரதமர் பிரதிக்ஞை

கொழும்பு,ஏப்.10

''புலிப் பயங்கரவாதத்திற்கு எதிரான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் குரலைப் புலிகள் நசுக்கிவிட்ட போதிலும் புலிகளை முற்றாக விரட்டியடிக்கும் - அவர்களின் பயங்கரவாதத் தைத் தோற்கடிக்கும் - எமது நடவடிக்கை ஓயாது.''

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும்கூறியவை வருமாறு:-

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இந்த நாட்டைப் பிரிக்காது அனைவரும் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதற்காகப் புலிப் பயங்கரவாதத்தை ஒழிக்கப் பாடுபட்டார்.

அதற்காகவே அவர் புலிகளால் கொல்லப்பட்டார். அவரது குரலைப் புலிகள் நசுக்கியபோதிலும் அவரது கருத்தை அவர்களால் அழிக்க முடியாது.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் ஜெயராஜின் கனவை நாம் நனவாக்குவோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட எம்.பியாக சிறில் நேற்றுப் பதவியேற்பு

புதிய எம்.பிக்களாக இரண்டுபேர் நேற்று நாடாளுமன்றில் சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம்.லொக்குபண்டாரவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி சிவநேசனின் இடத்திற்கு யாழ். மாவட்டத்தில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அடுத்த நிலையில் இருக்கும் சொலமன் சூ. சிறிலும் -

எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் இடத்திற்குத் திகாமடுல்லத் தேர்தல் தொகுதியில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அடுத்து முன்னணியில் இருக்கும் முஹமட் நௌஷாத்தும் -

நேற்றுப் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்றனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் தலைமையில் கூடிய போது முதலில் நௌஷாத்தும் அடுத்து சிறிலும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இரண்டு எம்.பிகளுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைலாகு கொடுத்துப் பாராட்டுக்களைத் தெரிவித்தனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காணவில்லை



பண்டத்தரிப்பைச் சேர்ந்த சுப்பையா சிவஞானசுந்தரம் (வயது 65) என்பவரை கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் காணவில்லை. மனநலம் பாதிக்கப்பட்ட இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் ச.செல்வரத்தினம், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

ச. செல்வரத்தினம் (மைத்துனன்)

(72964)



வடமராட்சி, தென்மராட்சி
பிரதேசங்களுக்கான
மாபெரும்
வேலைவாய்ப்பு
எங்கே? எப்போது?
விவரம் நாளைய உதயனில்
எதிர்பாருங்கள்



## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் ஆரம்பகாலத் தலைவராகவும் செயலாளராகவும் ஈஞ்சடி வைரவர் ஆலயத்தில் ஆரம்பகால நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து பணியாற்றிய

### அப்பாத்துரை சிவதாசன்



அவர்கள் காலமான செய்தியறிந்து அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா ஈஞ்சடி வைரவப் பெருமானின் பாதார விந்தங்களை அடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஈஞ்சடி வைரவர் தேவஸ்தானம்
தர்மகர்த்தா சபை,
நாவலர் சனசமூக நிலையம்,
பாலர் பாடசாலை, விளையாட்டுக்கழகம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (A)



## தவறிவிட்டது

வெடியரசன் வீதி, காரைநகர் என்னும் முகவரியுடைய சந்திரசேகரம் விஜயரூபி என்பவருடைய தே.அ. அட்டை (806641758V), ஆமி IC, NAVY IC என்பன ஆனைக்கோட்டைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பஸ்சில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். (சி/552255)


## வெள்ளுண்மை போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.10

கீரிமலை கிழக்கு பரணி பாலர் பாடசாலை ... போட்டி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பாடசாலை ... திடலில் இடம்பெறவுள்ளது.

திருமதி கி. கோபாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.பாக்கியராசா கலந்துகொள்கிறார்.

## பரதநாட்டிய போட்டி

சங்கானை,ஏப்.10

வலி. மேற்கு பிரதேச செயலகம் நடத்தும் பரதநாட்டியப் போட்டி இன்று முற்பகல் 9.15 முதல் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

தனிநடனம், குழுநடனம் என இரு பிரிவுகளாகப் போட்டிகள் இடம் பெறும்.

இப்போட்டிகளில் பொன்னாலை சந்திர பரத கலாலயம், வட்டு. தென்மேற்கு நாட்டுக்கூத்து அபிவிருத்திக்குழு, சங்கானை மத்தி இந்து இளைஞர் மன்றம் ஆகியன பங்கு பற்றுகின்றன.

(1-29)

## கூடைப்பந்தாட்டம்

சங்கானை,ஏப்.10

நியூ பவர் வேர்ல்ட், பியூட்டி செலக்ஷன் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்திவரும் கூடைப்பந்தாடச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பலக்லைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதிப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

* ஆண் கள் - ஜொலிஸ்ரார் வி.க. எதிர் சென்றலைட்ஸ்.
* பெண்கள் - கொக்குவில் மத்தி ச.ச.நி எதிர் பமீலியன் வி.க.

## ஆங்கில ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.10

தீவக வலயத்தில் தரம் 7, தரம் 11 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. (1)


சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
விற்றுத் தீர்த்தல்
விற்றுத் தீர்த்தல்
ஞானம்ஸ் புடைவையகம்
சகல விதமான
றெடிமேட் ஆடைவகைகளும்
மிக மிக மலிவு விலையில் விற்றுத் தீர்க்கப்படுகின்றன
01.04.2008 முதல் 15.04.2008 வரை
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் கடை திறந்திருக்கும்)
உடன் நாடுங்கள்!



ஞானம்ஸ் புடைவையகம்
இல.18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C/552256)



MEGA OFFER
புதிய கிளை மற்றும் வருஷப்பிறப்பை முன்னிட்டு

| | | |
|---|---|---|
| UNISTA<br>Intel Celeron D 1.6 Ghz<br>AsRock/MSI Main Board<br>256Mb DDR1/512 DDR2 Memory<br>40 Gb HDD<br>CDROM<br>ATX Case with SMPS<br>15 Samsung Monitor<br>Keyboard<br>Mouse | UNISTA1<br>Intel Celeron D 1.6 Ghz<br>AsRock/MSI Mother Board<br>17" Samsung/Intex Flat Monitor<br>ATX Case with SMPS<br>512 Mb Memory<br>80 Gb HDD<br>Combo DVD/CD-RW<br>Keyboard<br>Mouse<br>Speaker & UPS | UNISTA2<br>Intel Celeron D 1.6 Ghz<br>Asus Mother Board<br>1 Gb Memory<br>160 Gb HDD<br>DVD-RW<br>ATX Case with SMPS<br>15 LCD Monitor<br>Keyboard<br>Mouse<br>Speaker & UPS |
| UNIDUAL<br>Intel Pentium Dual Core 1.8Ghz<br>AsRock/MSI/Foxconn M Board<br>512 Mb Memory<br>80 Gb HDD<br>Combo<br>ATX Case with SMPS<br>15 Samsung Monitor<br>Keyboard<br>Mouse | UNIDUAL1<br>Intel Pentium Dual Core 18Ghz<br>Asus/Intel Main Board<br>1 Gb DDR2 Kingston Memory<br>80 Gb HDD<br>DVD-RW<br>ATX Case With SMPS<br>17" Samsung / Intex<br>Keyboard<br>Mouse<br>Speaker& UPS | UNIDUAL2<br>Intel Pentium Dual Core 18Ghz<br>Asus/Intel Main Board<br>1 Gb DDR2 Kingston Memory<br>160 Gb HDD<br>DVD-RW<br>ATX Case With SMPS<br>15" LCD<br>Keyboard<br>Mouse<br>Speaker& UPS |
| UNICORE<br>Intel Core 2 Duo 2.0/2.2 Ghz<br>AsRock/MSI/Foxconn M Board<br>512Mb DDR2 Memory<br>ATX Case with SMPS<br>15 Samsung Monitor<br>80 Gb HDD<br>DVD-RW Sony<br>Keyboard<br>Mouse | UNICORE1<br>Intel Core 2 Duo 2.0/2.2 Ghz<br>AsRock/MSI/Foxconn M Board<br>1Gb DDR2 Memory<br>ATX Case with SMPS<br>17 Samsung Monitor<br>80 Gb HDD<br>DVD-RW Sony<br>Keyboard<br>Mouse<br>Speaker & UPS | UNICORE2<br>Intel Core 2 Duo 2.0/2.2 Ghz<br>Asus / Intel Original<br>1Gb DDR2 Memory<br>160 Gb HDD, DVD-RW<br>ATX Case with SMPS<br>15" LCD<br>Keyboard-a4tech mini<br>Mouse<br>Speaker<br>UPS |
| IBM Lenovo A55 ThinkCenter<br>Intel Pentium Dual Core 1.8Ghz<br>IBM Traded Intel 946 MainBoard<br>IBM 512 Mb DDR2 Memory<br>IBM ATX LGA Case with SMPS<br>IBM 17 CRT Monitor<br>IBM 80 Gb HDD<br>IBM Combo<br>IBM Usb Keyboard<br>IBM Usb Mouse<br>IBM 1.44 FDD | HP Pavillion<br>Intel Pentium Dual Core 1.8 Ghz<br>HP Traded Intel Main Board<br>HP 512Mb Memory<br>HP ATX LGA Case with SMPS<br>HP 17" Perfect Flat Monitor<br>HP 80 Gb HDD<br>HP Combo<br>HP Keyboard<br>HP Mouse | UNISPL<br>Intel Core 2 Duo 2.0/2.2<br>Intel Classic Dv3 Main Board<br>2Gb DDR2 Memory, 160 Gb HDD,<br>DVD-RW, Combo, 17" LCD, ATX<br>Case, 256Mb VGA, PCTV Cap<br>Higher End Scanner<br>Keyboard-Multi media<br>Mouse<br>Woofer<br>UPS |

Purchase One & Get Free One
Each 10,000/- Purchase
Get 1Gb Flash Free
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளுடனும்
குடாவில் எங்குமில்லாத விலையில்
FREE
3 Years Replacement/ Service Warranty
With Each Pcs
1/2/4 Gb FlasH /UPS/ /TABLE/ /PrinteR/ ScanneR
ஒவ்வொரு கணனியுடனும்
FREE
காற்றுள்ள போதே தூற்றி கொள்ளுங்கள்

UNIT மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737
Opp to BUS Stand
Nelliady, Karaveddy



## அன்னை நாகா பூட்சிற்றி மலிவு விற்பனை

நவீன டிசைன்களில் மங்கையர் மனம் கவரும் கவரிங் நகைகள் 50% கழிவு விலையில் உடன் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

அன்னை நாகா பூட்சிற்றி
175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
Tel. : 222 5515

(72966)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்.உயர் தொழில் நுட்பவியல் HNDA (Day) 3ஆம் வருடத்தில் கல்வி கற்கும் எமது சகமாணவி க.வேணி அவர்களின் அன்புத் தந்தை

### கணபதிப்பிள்ளை கதிரேசு

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

HNDA (Day) III ஆம் வருட மாணவர்கள்.



## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஊழியர் த.தவராஜன் அவர்களின் தந்தை

### கந்தையா தம்பிராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,
யா/குரும்பசிட்டி, பொன் பரமானந்தர் ம.வி.

(72969)



## மரண அறிவித்தல்கள்

### அப்பாத்துரை சிவதாசன்

(முன்னாள் கிராம அலுவலர், J/130 சுதுமலை தெற்கு)



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்பாத்துரை சிவதாசன் (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2008) வியாழக்கிழமை திருச்சியில் நடைபெறுகின்றன என்பதை அறியத்தருகிறோம்.

மதவடி லேன்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (72972)

தகவல்:
சிவகுமார் (மருமகன்)

### கணபதிப்பிள்ளை கதிரேசு

அராலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிரேசு நேற்று (09.04.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், துஸ்யந்தினி (யாழ்.பல்கலைக்கழகம்), உமாகாந்தன் (டோகா), வேணி (உயர் தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி கணபதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், ரத்தினம்மா, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, கணேசமூர்த்தி, கனகாம்பிகை, நகுலாம்பிகை, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராமநாதன் - இராசமணி தம்பதியினரின் மருமகனும், இராஜநாதன், இராமச்சந்திரன், காலஞ்சென்ற புனிதலோஜினி, உமாபதிசிவம், சக்திவேல், சிறிதரன், ஜெயகௌரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சச்சிதானந்தன், குமரேசமூர்த்தி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் மானிப்பாயினுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேதர்ஸ் லேன்,
மானிப்பாய். (72959)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

### செல்லத்துரை சரஸ்வதி

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சரஸ்வதி (08.04.2008) செவ்வாய்க்கிழமை இறையடி அடைந்தார்.

அன்னார் இளையதம்பி செல்லத்துரையின் (பண்டிதர், சைவப் புலவர், ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், கலாவாணி (சைவப்புலவர், சித்தாந்தபண்டிதர், ஆசிரியை), தயாபரன் (யாழ் பல்கலைக்கழக விலங்கியல் ஆய்வுகூட உதவியாளர்) ஆகியோரின் அன்புத்தாயும், திருமதி தயாபரன் ராஜினியின் (ஆசிரியர்) மாமியாரும், சுந்தரலிங்கத்தின் (சீதுவ, நீர்கொழும்பு) அன்புச் சகோதரியும், நினுஜா, நினுஜன், நிசாந், சங்கவி, ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.04.2008) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி. (72974)

தகவல்:
செ.கலாவாணி,
செ.தயாபரன்
(மகள், மகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரியை சென்றல் 7 விக்கெட்டுக்களால் வென்றது

## செல்ரன் அரைச்சதம் போட்டார்; சிவகரன் 6விக்கெட்டுக்களைச் சாய்த்தார்

வலி.வடக்கு, ஏப்.10

யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட்போட்டியொன்றில்.யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்ப்பாண மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 58:1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சிறிஜீவன் 43, யசீந்திரன் 26, பிரசாத் 17 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஸ்ரீபன்ராஜ் 13 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் நிர்மல்காந் 11 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 43 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

டயான் 36, எறின்துசாந் 22, சிவகரன் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

நேகதன் 10 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் ஜோய் 05ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்க 2 விக்கெட்டுக்களையும் ஜெயநாதன் 10 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 33 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

கஜந்தன் 14, ஜெயசந்திரன் 11, கிறோசன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

சிவகரன் 12 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுக்களையும் கோபிகன் 07 ஓவர்கள் பந்து வீசி 09 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

86 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி 25 ஓவர்களில் 03 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் 7 விக்கெட்டுக்களினாலும் ஒரு ஓட்டத்தினாலும் வெற்றி பெற்றது.

செல்ரன் 54 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் பந்து வீசிய துசியந்தன் ஒரு ஓவர் பந்து வீசி ஓட்டங்கள் எதுவும் இன்றி ஒரு விக்கெட்டையும் கஜந்தன் 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)



சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் பெண்கள் பிரிவில் இளவாலைக் கன்னியர் மடம் ம.வி. 21 முதலிடங்களையும், 16 இரண்டாம் இடங்களையும்,12 மூன்றாம் இடங்களையும் பெற்று முன்னணியில் உள்ளது. போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற வீராங்கனைகள் பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருடன் எடுத்துக் கொண்ட படம் இது.

## கரப்பந்தாட்டச் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவாகினர்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் 2008ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் அதன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் விவரம் வருமாறு:

தலைவர்- கே.ஏகாம்பரம், செயலாளர்- கே.மனோகரன், பொருளாளர்- ஏ.குமாரசிவம் இவர்களுடன் மேலும் எட்டு நிர்வாகசபை அங்கத்தவர் கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (203)




## பருத்தித்துறை பிரதேச விளையாட்டுப் போட்டி; சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் சம்பியன்

கரவெட்டி,ஏப்.10

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களின் 2008ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டியில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழகம் 64 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனாகியது.

34 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தினைப் பெற்றது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தலைமையில் கடந்த 5 ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

போட்டி முடிவுகள் வருமாறு:

**துடுப்பாட்டம் (ஆண்)**

1ஆம் இடம்- வல்லியானந்தம் விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம் - பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

**கரப்பந்தாட்டம் (ஆண்)**

1ஆம் இடம்- அண்ணா விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம்- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

**எல்லே (ஆண்)**

1ஆம் இடம்- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம்- சென்.தோழஸ் விளையாட்டுக் கழகம்.

**கபடி (ஆண்)**

1ஆம் இடம்- துள்ளு மீன் விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம்- சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம்.

**உதை பந்தாட்டம் (ஆண்)**

1ஆம் இடம்- வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்- திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்

**மெய்வன்மைப் போட்டிகள் (ஆண்)**

1ஆம் இடம்- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்- சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம்.

**துடுப்பாட்டம் (பெண்)**

1ஆம் இடம்- சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம்- தீப ஜோதி விளையாட்டுக் கழகம்.

**கரப்பந்தாட்டம் (பெண்)**

1ஆம் இடம்- சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்- தீப ஜோதி விளையாட்டுக் கழகம்.

**எல்லே (பெண்)**

1ஆம் இடம்- சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம்- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

**கபடி (பெண்)**

1ஆம் இடம்- சென் தோமஸ் விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம் தீப ஜோதி விளையாட்டுக் கழகம்.

**உதைபந்தாட்டம் (பெண்)**

1ஆம் இடம் சென். தோமஸ் விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம்- பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

**வலைப்பந்தாட்டம் (பெண்)**

1ஆம் இடம்- திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம்- சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம்.

**மெய்வன்மைப் போட்டி (பெண்)**

1ஆம் இடம்- சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம்.

2ஆம் இடம்- வல்லியானந்தம் விளையாட்டுக் கழகம். (50-70)

# சிறந்த பொறியியலாளனாக வளர்ந்து எனது கிராமத்தை வளமடையச் செய்ய வேண்டும்

## அம்பன் அ.மி.த.க.பாடசாலை மாணவன் விஜிகுகன்



எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக உருவாகி, எனது கிராமத்தை வளமடையச் செய்து நானும் உயர்வடைய வேண்டும் என்பதே எனது இலட்சியமும், இலக்குமாகும்.

இவ்வாறு அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்று ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ, சி சித்தியைப் பெற்ற முருகேசு விஜிகுகன் என்ற மாணவன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டப் பாடசாலைகள் கல்வியில் மிகவும் பின்தங்கிய பிரதேசம் என ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மருதங்கேணி கல்விக் கோட்டப் பிரிவில் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மூன்று பாடசாலைகளே ஜீ.சீ.ஈ.சாதாரணதர வகுப்புகளைக் கொண்டவை.

இம் மூன்று பாடசாலைகளிலும் மிகவும் அதிசிறந்த பெறுபேறுகளை அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்ற முருகேசு விஜிகுகன் என்ற மாணவன் பெற்றுள்ளார். இவர் ஒன்பது பாடங்களில் 'ஏ' தரச் சித்தியும் பத்தாவது பாடமான ஆங்கிலத்தில் 'சி'தரச் சித்தியும் பெற்றுள்ளார்.

இவர் உதயனுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

அம்பன் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட நான்.ஆரம்பக் கல்வி முதல் ஜீ.சீ.ஈ. சாதாரண வகுப்புவரை அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே கற்று வந்தேன்.

எமது கிராமத்தில் மின்சாரம் இன்மையால், மாலை நேரங்களில் பாடசாலையில் கற்ற விடயங்கள் சகோதரியின் உதவியுடன் மீண்டும், மீண்டும் மீட்டிப் படிப்பேன். இரவு வேளைகளில் குப்பி விளக்குத்தான் எனது கற்றலையும், அறிவுச் சுடரையும் தூண்டிவிட்டது.

பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இல்லாதநிலையில் ஒரு சில செய்முறைகளைச் செய்து அனுபவத்தைப் பெற்றிருந்தேன்.

நான் தற்போது கணிதத்துறையை தெரிவு செய்துள்ளேன். இத்துறையில் கற்று ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். இந்த இலட்சியத்தை அடைந்து அதனூடாக நான் வளர்ந்த எனது கிராமத்தை வளமடையச் செய்வேன். இந்த இலக்கை அடைய எனது கடுமையான முயற்சிகள் தொடரும்.

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் அதியுயர்ந்த பெறுபேறான 9 ஏ, சி சித்தியை நான் பெற்றுக் கொள்வதற்கு எனது பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் தந்த ஊக்கமும், உற்சாகமும், சகோதரி தந்த மீட்டல் பயிற்சிகளும், பெற்றோர்களின் அரவணைப்புமே காரணமாகும். இவற்றை ஒரு போதும் என்னால் மறக்க முடியாது -என்றார்.

# எமது மக்களுக்குச் சேவை செய்வதற்கு மருத்துவராக வேண்டும் என்பதே எனது விருப்பம்

## 10 'ஏ' சித்திபெற்ற மகாஜனா மாணவி கார்த்திகா



கல்லூரி அதிபரும், ஆசிரியர்களும் எமது கல்வியில் காட்டிய அக்கறையும் கவனமும் தான் நான் சிறந்த பெறுபேற்றைப் பெற உதவின. அத்துடன் எனது பெற்றோரும் கல்விக்கு வேண்டிய சகல வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்தி ஊக்குவித்தார்கள்.

இவ்வாறு கூறுகிறார் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் ஜி.சீ.ஈ.சாதாரணப் பரீட்சை யில் 10'ஏ' சித்தி பெற்ற மாணவி செல்வி யோகேந்திரன் கார்த்திகா.

அவர் மேலும் கூறியதாவது:

தான் ஒரு மருத்துவராக வரவேண்டும். அதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும். எனது வகுப்பில் கல்வி கற்ற 35 மாணவர்களும் இப்பரீட்சையில் சித்தியடைந்தமை மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

எமது அதிபரும் ஆசிரிர்களும் எமக்குத் தொடர் வகுப்புகளை நடத்தியதன் பலனாக இந்த நல்ல பெறுபேறு கிடைத்திருக்கின்றது. அத்துடன் வெளியில் இருந்து வளவாளர்களை அழைத்து கருத்தரங்குகள், பயிற்சிப் பரீட்சைகள் என்பவையும் நடத் தப்பட்டன. எமது வெற்றிக்கு இவை [illegible] விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு மட்டும் நான் தனிப்பட்ட வகுப்புகளுக்குச் சென்றிருந்தேன். ஏனைய பாடங்களை வீட்டில் இருந்தே கற்றேன்.

நான் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளேன். அத்துடன் 'முதிர்வின் உதவி' என்ற கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளேன். நாம் வகுப்பில் இணைந்த கற்றல் நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் காட்டுவோம். அத்துடன் எமது பாடசாலை நூலகத்தையும் கற்றலுக்குப் பயன்படுத்து வோம். இதனால் எம்மால் சிறந்த பெறுபேற்றைப் பெற முடிந்தது. எதிர்காலத்தில் நான் ஒரு சிறந்த மருத்துவராக வந்து எமது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம்- என்றார். (50-86)

## கணனிப் பயிற்சி நெறிக்குநேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.10

ஈரச் கணனி நிறுவனமும் வலி.தெற்குப் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் இலவசக் கணனிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருதனார் மடம்சந் திக்கு அண்மையாக அமைந்துள்ள ஈரச் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பியவர்களை பிறப்புச்சான்றிதழ், ஜி.சீ.ஈ.சாதாரண உயர் தர பேறுபெறுகள், நற்சான்றிதழ் மற்றும் குடும்ப அட்டைகளுடன் சமுகம் தரும்படி வேண்டப்பட்டுள்ளது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

மாதகல்நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றதுடன் ஆரம்பமாகி யுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி மஞ்சத்திருவிழாவும், 19 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 20 ஆம் திகதி தீர்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன(203-135)

* * *

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 15 ஆம் திகதி கைலாச வாகனத் திருவிழாவும், 19ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 20 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 21 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவி


**செல்வி கார்த்தாயினி மகேந்திரகுமார்**

க.பொ.த சாதரண தரம் 2007 பரீட்சையில் பத்துப்பாடங்களிலும் "ஏ" (அதிவிசேட சித்தி) பெற்றுள்ளார். இவர் மேலும் பல உயர் பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ நடராஜப் பெருமானின் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம். எமது பாடசாலையில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம்.

(சி/552248)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



*யா/இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய ஸ்தாபகருள் ஒருவரும், முதல் அதிபரும் சமூகத் தொண்டருமாகிய*

**அமரர் இளையவன் வல்லிபுரம்**

இமையூர் பெற்றெடுத்த பெருமகனே!
கல்விக்கு வித்திட்ட பெருந்தகையே!
உங்கள் நினைவலைகள்- என்றும்
எங்கள் இதயங்களை விட்டுப் பிரியாது.
"ஓம் சாந்தி"

பாடசாலைச் சமூகம்.
யா/இமையாணன் அ.த.க.வி.

## கண்ணீர் அஞ்சலி

அப்பாத்துரை சிவதாசன் (G.S)



உயர் சேவை பல புரிந்தவரே
உயர் குடித் தோன்றலில் பிறந்தவரே
உத்தம குணங்கள் உடையவரே
உயிரான என் அண்ணலே
உம் முகம் எப்பிறப்பில் காண்பேனோ

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (72915) இ.த.தர்மசோதி.

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவு தின அழைப்பும்

மலர்வு 01 . 06 . 1933



உதிர்வு 11 . 03 . 2008

**அமரர் இளையவன் வல்லிபுரம்**

*( இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான்)*

கடந்த 11.03.2008 அன்று எங்கள் குடும்பத் தலைவர் சிவபதமடைந்த செய்திகேட்டு உடன்வந்து உதவிக்கரம் நீட்டிய உற்றார், உறவினர், மற்றும் அயலவர்களுக்கும் துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் தந்தி, தொலைபேசி, பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும் இறுதிச் சடங்கில் பங்கு கொண்டு மலர்மாலை சாத்தியும் மலர் வளையம் வைத்தும் அஞ்சலி செலுத்திய அன்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்ட அனைத்து உள்ளங்களுக்கும், அஞ்சலிக் கூட்டத்தினை ஒழுங்கமைத்து உரையாற்றிய பெரியோர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் (08.04.2008) செவ்வாய்க்கிழமை அன்று வில்லூண்டி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றது. ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (10.04.2008) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*"ஜெயமகால்"*
*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.* (72958) மனைவி, பிள்ளைகள்.

## வாராந்த நிகழ்வுகள்

வடமராட்சி,ஏப்.9

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதிஞாயிறு தோறும் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ''மானிட வாழ்வில் இராமன்'' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கோ.கோகிலரதனின் சொற்பொழிவு இடம்பெறும்.

(236)

* * *

வடமராட்சி,ஏப்.9

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சி இடம்பெறும்.

(1-236)

## தளபாடங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

மட்டுவில் சோமஸ்கந்தா முன்பள்ளிக்கு அறவழி நிலையத்தினர் அண்மையில் தளபாடங்களை வழங்கியுள்ளனர்.

(202-207)

## பண்டத்தரிப்பு மகளிர் சிக்கனக் கடனுதவிச் சங்க வெள்ளிவிழா நிகழ்வு

வலி.தென்மேற்கு, ஏப்.10

பண்டத்தரிப்பு மகளிர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழா நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசவ் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு எம்.ஜேசுரட்ணம் அடிகளார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சிக்கன கடனுதவி கூட்டறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவர் எஸ்.சிவசுப்பிரமணியம், கியூடெக்நிறுவன இயக்குநர் அருட்திரு சி.ஜெயக்குமார் அடிகளார், விவசாயப் போதனாசிரியர் திருமதி ப.மணிவண்ணன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வர்.

(203-135)

## சண்டிலிப்பாயில் கால்நடை மருந்து விற்பனை நிலையம்

வலி.தென்மேற்கு, ஏப்.10

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் இப் பிரதேச கால்நடை வளர்ப்போரின் நலன் கருதி சண்டிலிப்பாய் டச்சு வீதியில் கால் நடை மருந்து விற்பனை நிலையம் ஒன்றை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறக்கவுள்ளது.

சங்கத் தலைவர் ரி.இராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இத் திறப்பு விழாவில் சண்டிலிப்பாய் பதில் கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி சி.மரியதாசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிலையத்தை திறந்து வைப்பார்.

கூட்டுறவு பரிசோதகர் ரி.சண்முகநாதன் உட்பட மற்றும் பலர் இதில் கலந்து கொள்வர்.

(203-135)

## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.மாவட்ட கலை, கலாசார பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (203)

* * *

வலி.தென்மேற்கு,ஏப்.10

பிரான்பற்று கிராம அபிவிருத்தி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்க உபதலைவர் ஐ.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு.சுதாகர் கலந்து கொள்வார்.

பிரான்பற்று J/147 கிராம அலுவலர் [illegible] சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். புதுவருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது.

(203-135)

## அழகியற்பாடச் செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.10

நாளை வெள்ளிக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெற விருந்த அழகியற்பாடச் செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

உரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று வேலணை வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203)

## மூன்றாம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 01 ★ 07 ★ 1920



இறப்பு 13 ★ 04 ★ 2005

**அமரர் செல்லப்பா சுப்பிரமணியம்**

*ஆனந்த வாழ்வு தந்தீர் ஆகாயமாய் உயர்ந்தீர்*
*ஆண்டுகள் கடந்திட்டாலும் ஆறுதல் கிடைக்கவில்லை*
*ஆயினும் எம் குடும்ப விளக்கின்*
*ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.* (சி/552249) குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

975 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 19 21 30 47

08-04-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4736887 - 4752974

ஜக்பொட் பரிசு ரூபா.3,308,900/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 345,842 | 10/- | 3,458,420/- |
| 2 இலக்கங்கள் | 31,771 | 20/- | 635,420/- |
| 1 இல. + லக்கினம் | 31,412 | 30/- | 942,360/- |
| 2 இல. + லக்கினம் | 2,875 | 100/- | 287,500/- |
| 3 இலக்கங்கள் | 848 | 500/- | 424,000/- |
| 3 இல. + லக்கினம் | 80 | 5,000/- | 400,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,308,900/- | 3,308,900/- |
| மொத்தம் | | | 9,856,600/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 412,838 | | 10,880,100/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5627920 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஏப்ரல் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 4740504-0-11 |
| மாத்தளை | 4748110-4-92 |
| குருநாகல் | 4741470-5-72 |
| கண்டி | 4744578-2-79 |
| நுவரெலியா | 4744560-4-59 |


## மரண அறிவித்தல்

### *இராசையா இராஜேந்திரன்*

(முன்னாள் மாநகரசபை வாகனப்பகுதி பிரதம அத்தியட்சகர்)



242, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும்முன்னாள் யாழ்.கொழும்பு மாநகரசபை வாகனப்பகுதி பிரதம அத்தியட்சகருமான இராசையா இராஜேந்திரன் 08.04.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி புஷ்பராணியின் கணவரும் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் Ep.இராசையாJP அன்னலட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் இராஜேஸ்வரன் (ரமணன் - சட்டத்தரணி), அருந்ததி (கணக்காளர் - கனடா), நிருபா, (கனடா), சிவகணேஷன் (நோர்வே) ஆகியோரின் தந்தையாரும் ஜெயரஞ்சனி, ஜெபஜீவி, சிறீகாந்தா, நித்தியானந்தன் ஆகியோரின் மாமனும் அரவிந்தன், நிருத்திகம், ரிஷிகன், நேகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2008) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*242, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (72957) தகவல்: மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் பிரதேசத்தில் சுயதொழில் மேற்கொள்ள 35 பேருக்கு நிதியுதவி

நாவற்குளி,ஏப்.10

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் விசேட தேவைக்குரியோர் 35 பேருக்கு சுயதொழில் மேற்கொள்வதற்கென வடக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்களம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அண் மையில் வழங்கியுள்ளது.

மேலும் விசேட தேவைக்குரியோர் 5 பேருக்கு மூக்குக் கண்ணாடியும் ஒருவருக்கு காது கேட்கும் கருவியையும் வழங்கியுள்ளது. (202-288)

# சிற்றூர்திகள் யாழ்.நகரிலிருந்து மாலை 6 மணிவரை

யாழ்ப்பாணம்,ஏப்.10

புத்தாண்டை முன்னிட்டு சிற்றூர்திகள் மாலை நேரத்தில் யாழ்.நகரில் இருந்து புறப்படும் நேரம் ஒரு மணித்தியாலயத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பஸ் நிலையப் பகுதியிலிருந்து மாலை 5 மணிக்குப் புறப்பட்ட சிற்றூர்திகள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் மாலை ஆறு மணிக்குப் புறப்படும் என்று யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

பொதுமக்களின் - பயணிகளின் - வேண்டுகோளுக்கு இணங்க இந்த மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகச் சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-1)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் 15 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.10

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 15 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நெதர்லாந்து நிறுவனமொன்றின் நிதி அனுசரணையுடன் கொழும்பு மனிதநேய அமைப்புகளின் இணையத்தின் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்த நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

அறவழி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் இணையத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.ரஞ்சித், முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் கைதடி விவசாய போதனாசிரியர் எஸ்.சிவபாலனும் கலந்துகொண்டார்.

மேலும் 21 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# தொழிற்பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

வடக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தினால் கரவெட்டிபிரதேச செயலாளர் ஊடாக மின்னிணைப்பு, கணனி வன்பொருள் திருத்தம், பற்றிக் பிறின்ரிங் ஆகிய பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளது.

மின்னிணைப்பு, கணனி வன்பொருள் திருத்தப் பயிற்சிகள் ஆகியவை 6 மாதத்திற்கும் பற்றிக் பிறின்ரிங் பயிற்சி ஒரு மாதத்திற்கும் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிகளில் இணைய விரும்புபவர்கள் கிராமசேவையாளர்கள் ஊடாக தமது சுயவிவரக்கோவையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் 'பிரதேச செயலாளர், கரவெட்டி' என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் 30 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.10

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை பல்வேறு பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் மோட்டார் சைக்கிள் திருத்துதல், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் கட்டட நிர்மாணப் பயிற்சி, யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் வீட்டு மின் இணைப்புப் பயிற்சி, சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் அலுமினியப் பொருத்துகைப் பயிற்சி என்பன நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சிநெறியில் இணைய விரும்புபவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களைத் தபால் மூலமோ நேரிலோ 'இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, 1031, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# களனிப் பல்கலைக்கழக அனுமதிப் பரீட்சையை யாழ்.மாவட்டத்திலும் நடத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.10

களனிப் பல்கலைக்கழகத்தின் 2007/2008 கல்வியாண்டிற்கான மாணவர் அனுமதிப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்தும் பல மாணவர்கள் தோற்றவுள்ளனர். தற்போதைய போக்குவரத்துச் சிக்கலைக் கருத்திற்கொண்டு இப்பரீட்சையை இங்கும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறு பரீட்சார்த்திகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

களனிப் பல்கலைக்கழக அனுமதிக்கான பொது உளச்சார்புப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக சிறி தர்மலோக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகள் வெளி மாவட்டத்திற்குச் செல்வதில் எதிர்கொள்ளும் போக்குவரத்துச் சிரமங்கள், செலவுகள் மற்றும் தங்குமிட வசதிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு இப்பரீட்சையை யாழ். மாவட்டத்திலேயே நடத்துவதற்கு விரைவில் ஆவண செய்யுமாறு பரீட்சார்த்திகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

யாழ்.அரச அதிபர், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகியோரிடமும் பரீட்சார்த்திகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கொடிகாமம் நகரிலுள்ள பொது மலகூடங்கள் பொதுமக்கள் பாவிக்கமுடியாத நிலையிலுள்ளன

யாழ்ப்பாணம்,ஏப்.10

கொடிகாமம் நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மலகூடங்களைப் பொதுமக்கள் பாவிக்கமுடியாத நிலையில் காணப்படுகின்றன.

கொடிகாமம் பொதுச் சந்தையில் அண்மையில் அமைக்கப்பட்ட மலகூடங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாததால் சந்தைக்குச் செல்லும் பொதுமக்களும் வியாபாரிகளும் அவசர தேவைக்கு மலகூடத்தைப் பயன்படுத்தமுடியவில்லையென விசனம் தெரிவிக்கின்றனர்.

கொடிகாமம் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மலகூடத்திற்கென வைக்கப்பட்டுள்ள நீர்த்தொட்டி கழுவிச் சுத்தம் செய்யப்படாமல் உள்ளதால் கிருமிகள் பெருமளவில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இந்த மலகூடங்களிலிருந்து தொற்றுநோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்தனர். (202-207)

# இடிமுழக்கத்துடன் மின்னல் விழுந்து வடமராட்சியில் மின் இணைப்புகள் சேதம்

வடமராட்சி,ஏப்.10

வடமராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையின்போது பல இடங்களிலும் இடி முழக்கத்துடன் மின்னல் விழுந்து தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

புலோலி தெற்கு காந்தியூர் வீரபத்திரர் கோவில் சுற்றாடலில் மின்னல் தாக்கியதால் அப்பகுதியூடாகச் சென்றுகொண்டிருந்த தொலைக்காட்சிக்கான 'கேபிள்' இணைப்பு வயர் முற்றாக எரிந்ததுடன், கோவில் வீதியிலுள்ள மரம் ஒன்றின் ஒரு பகுதியும் எரிந்து கருகியுள்ளது. அம்மரத்தில் கட்டப்பட்டிருந்த கோவில் ஒலிபெருக்கியின் சாதனமும் சேதமடைந்தது.

இச்சம்பவத்தில் 'கேபிள்' இணைப்பைப் பெற்றிருந்த பல வீடுகளில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டிகளும் எரிந்து சேதமடைந்துள்ளன.

குறிப்பிட்ட தினத்தன்று பிற்பகல் ஒரு மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இப்பகுதியில் கனத்த மழை பெய்தது. அதனைத் தொடர்ந்தே ஆங்காங்கே பலத்த இடிமுழக்கத்துடன் மின்னல் விழுந்து தாக்கங்களை ஏற்படுத்தியது. (202-236)



யாழ்.செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனியில் ஆயுட்காப்புறுதி செய்துகொண்ட மணியசேகரம் விக்னேஸ்வரன் என்பவரது மரண இழப்பீட்டுத் தொகையான மூன்று லட்சம் ரூபா பெறுமதியான காசோலை அண்மையில் வழங்கப்பட்டது.

யாழ்.கிளையில் வைத்து யாழ்.பிராந்திய முகாமையாளர் பா.நந்தகுமார் வாடிக்கையாளரின் மனைவியிடம் காசோலையை வழங்குவதையும் அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரியான ஜெ.செல்வின் மற்றும் விற்பனை ஆலோசகரான க.சுகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (202)

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 155 பேர் சுயதொழில் ஓய்வூதியத்தில் இணைவு

நாவற்குளி,ஏப்.10

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் வரை 155 பேர் இணைந்துள்ளனர். இத்தகவலைக் கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அலுவலர்கள் ஆகியோர் மூலமாகவும் நேரடியாகவும் சென்று சுயதொழிலில் ஈடுபடுவோர் தம்மை இணைத்து வருவதாகவும்-

இத்திட்டத்தில் 18 வயது முதல் 59 வயது வரையானோர் இணைந்து பல நன்மைகளைப் பெறலாம் எனவும் தற்போது இது சம்பந்தமான நடமாடும் சேவையை தாம் நடத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-288)

# மிருசுவில் பொதுநூலகத்தின் புத்தகங்கள் படையினரால் மீட்கப்பட்டு ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.10

தென்மராட்சி கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஏ-9 பிரதான வீதியில் இருந்த சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் உப அலுவலக பொதுநூலகத்தின் புத்தகங்களை படையினர் அண்மையில் மீட்டு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம், கொடிகாமம் நகர படையதிகாரி மேஜர் விதாரணவுடன் தொடர்பு கொண்டதையடுத்து படையதிகாரியால் சுமார் 3000 புத்தகங்களும் புத்தக ராக்கை உட்பட தளபாடங்களும் மீட்டு கையளித்தன.

இந்த நூலகம் மீசாலை புத்தூர்ச் சந்தியிலுள்ள தனியார் வீடொன்றில் விரைவில் இயங்கவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின்கீழ் கைதடி, நாவற்குழி, கச்சாய், வரணி, மிருசுவில் ஆகிய இடங்களில் நூலகங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதப் பரீட்சைகள் எதிர்வரும் திங்களன்று

வேலணை,ஏப்.10

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

தீவகப் பிரதேச மாணவர்களுக்கான பரீட்சை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என தீவக வலய சங்கீதப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (202-267)

# தாதிய உத்தியோகத்தர்கள் அறுவருக்கு பதவி உயர்வு

வடமராட்சி,ஏப்.10

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களாகப் பணியாற்றிய 6 பேர் விடுதித் தாதிமார்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருமதி எல்.தர்மலிங்கம், திருமதி ஆர். பாலகங்காதரன், திருமதி எம்.சிவகுமார், திருமதி வி.பரராஜா, திருமதி கே.முரளிதரன், திருமதி பி.நடராசா ஆகியோரே விடுதித் தாதியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஒன்றரை வருட காலத்துக்கு கொழும்பு தேசிய வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது. (202-236)




# சிவபூமி முதியோர் இல்லத்திற்கு நூல்கள் தந்துதவுமாறு கோரிக்கை

சுழிபுரம்,ஏப்.10

சிவபூமி முதியோர் இல்லத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள அறிவாலயத்திற்கு வேண்டிய நூல்களைத் தந்துதவுமாறு இல்லத்தின் தலைவர் ஆறு.திருமுருகன் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

முதியோர் இல்லத்திற்கு வருகை தருபவர்கள் அறிவாலயத்தை பார்வையிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதியோர் இல்லத்தில் பழைய 'ஏ போட்டி' கார், பழைய ஒற்றை மாட்டு கூடார வண்டி ஆகியவை முதியவர்கள் பழைய நினைவுகளை நினைவுகொள்ளத்தக்க வகையில் இல்ல வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. (202-28)

# வடமராட்சிப் பகுதியில் மின்விநியோகத்திற்கு இடைஞ்சலான மரங்கள் வெட்டப்படுகின்றன

வடமராட்சி,ஏப்.10

வடமராட்சிப் பிரதேசத்தில் மின்சார விநியோகத்திற்கு இடைஞ்சலாக உள்ள மரங்கள், கிளைகள் என்பன இலங்கை மின்சார சபை ஊழியர்களால் வெட்டப்பட்டு வருகின்றன.

மின் இணைப்புகள் செல்லும் வழிகளில் இணைப்புகளுக்குத் தடையாகவும் இடைஞ்சலாகவும் உள்ள மரங்கள், கிளைகள் என்பன கடந்த சில நாள்களாகப் புலோலிப் பகுதியில் வெட்டப்பட்டு வருகின்றன.

இவை வெட்டப்படும்போது அப்பகுதிகளில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டே வெட்டப்பட்டு வருகின்றன. வடமராட்சிப் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-236)

# வீரகத்தி மகாவித்தியாலயத்தில் கணனி வள நிலையம் திறக்கப்பட்டது

பருத்தித்துறை,ஏப்.10

தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலய கணனி வள நிலையத்தை சிறுவர் பாதுகாப்பு நிதிய கல்வித் திட்ட முகாமையாளர் வி.எம்.முத்துராஜா சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து கணனிச் செயற்பாட்டை ஆரம்பித்துவைத்தார்.

இவ்விழாவிற்கு அதிபர் வி.கணேசமூர்த்தி தலைமை தாங்கினார். வடமராட்சி வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பி.சாந்தரூபன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் இப்பாடசாலைக்கு 25 கணனிகளையும் அதற்கான தளபாட உபகரணங்களையும் வழங்கியுள்ளது. (202-218)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் பங்குனித் திங்கள் 29ஆம் நாள் (11.04.2008) வெள்ளிக்கிழமை காலை 8.12 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள மிருகசீரிட நட்சத்திரமும் கன்னிலக்கினமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி வ.இராசதுரை தம்பதியரின் புத்திரன் திருநிறை செல்வன் **ஜீவகாந்தன்** அவர்களுக்கும்

திரு.திருமதி க.சுப்பிரமணியம் (சிறுவிளான்) தம்பதியரின் புதல்வி திருநிறை செல்வி **உதயசாந்தி** அவர்களுக்கும்

இறைவன் துணைகொண்டு திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.வ.இராசதுரை குடும்பத்தினர்,
பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

நி.மு.: திரு.க.சுப்பிரமணியம் குடும்பத்தினர்,
சிறுவிளான், இளவாலை,
த.மு: க.சுப்பிரமணியம்,
பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(இருவீட்டார் அழைப்பு)

✻14.04.2008 திங்கட்கிழமை மணமகள் இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெறும்.

(சி/552237)

# கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை

மேற்படி மருத்துவமனையில் பின்வரும் மருத்துவ நிபுணத்துவ சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

1. இதய நிபுணர் (Consultant cardiologist), Dr.P.லக்ஸ்மன் - ஞாயிறு காலை 11 மணி
2. பொது சத்திர சிகிச்சை நிபுணர் (Consultant General Surgeon) Dr.S.சிவகுமார் - சனி மாலை 4மணி
3. பொது மருத்துவ நிபுணர் (Consultant Physician) Dr.S.கேதீஸ்வரன் - புதன் மாலை 4 மணி
4. மகப்பேற்று நிபுணர் (Consultant V.O.G) Dr.திருமதி S.பவானி - ஞாயிறு காலை 9 மணி

Physiotherapy சிகிச்சை வெள்ளி மாலை 4 மணிக்கும் ஞாயிறு காலை 10 மணிக்கும் யாழ்.போதனா வைத்தியசாலை Physiotherapist அவர்களால் நடாத்தப்படுகின்றது.

நல்ல வசதிகொண்ட மருத்துவ ஆய்வுகூடம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

வெளிநோயாளர் பகுதி (OPD) - 24 மணித்தியாலயசேவை. விடுதியிலும் (Ward) நோயாளர் தங்கி சிகிச்சை பெறுகின்றனர்.

M.B.B.S பட்டம் பெற்ற மூன்று மருத்துவர்கள், Dr.செல்வி கிறிஸ்ரீன், Dr.D. அற்புத ஜெயம், செல்வி றொசாந்தி ஆகியோர் நிரந்தரமாக தினமும் மருத்துவ சேவை ஆற்றிக் கொண்டிருக்கின்றனர்.

நிர்வாகம்.

**Green Memorial Hospital**
Manipay, Srilanka,
(Established 1848)
T.P: 021 222 2747

(72951)

## டிறிபேர்க் கல்லூரியில் பெயர்ப்பலகை திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அபிவிருத்திச் சபையினரால் அமைக்கப்பட்ட கல்லூரி பெயர்ப்பலகை கடந்த திங்கட்கிழமை கல்லூரியின் முன்னாள் அதிபர் மு.நாகேந்திரராசாவினால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

(202-207)

## சர்வதாரி வருஷ உற்சவகால பிரசுரம்

சுழிபுரம்,ஏப்.10

சுழிபுரம் மேற்கு அரிகர புத்திர ஐயனார் ஆலய நிர்வாகத்தினரும் சுழிபுரம் பறாளை முருகன் ஆலய சங்காபிஷேக சபையாரும் எதிர்வரும் சர்வதாரி வருஷ உற்சவகாலம் தொடர்பான பிரசுரத்தை அச்சிட்டு ஊர் மக்களுக்கு விநியோகித்துள்ளனர்.

வருடப்பிறப்பு, கைவிசேஷம் ஏர் மங்கல கருமம் ஆகிய விடயங்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. (202-28)

## பன்னிரு திருமுறைகள் முற்றோதல் விழா

அகில இலங்கைத் திருமுறை மன்றம், நாட்டில் சாந்தி சமாதானம் வேண்டி திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய நால்வர் திருவுருவச்சிலைகளை யாழ்.குடாநாட்டு ஆலயங்கள் தோறும் எழுந்தருளச் செய்து பன்னிருதிருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றது.

இவ்வருடம் முழுவதும் யாழ்ப்பாணம் நாவலர் வீதி கடையிற் சுவாமி குருவார அன்ன சத்திரசிவன் ஆலையத்தில் நடைபெற்ற பன்னிரு திருமுறை முற்றோதல் நிறைவு வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆலய பூசையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெவுள்ளது.

பிரதம விருந்தினராக சிவனருள் புரவலர் சி.வெற்றிவேலாயுதம் பங்குபற்றி பன்னிரு மாதமும் பன்னிரு திருமுறை முற்றோதலில் பங்குபற்றியோரை பொன்னாடை போர்த்தி கௌரவிப்பார்கள்.

இதனைத் தொடர்ந்து சமயாச்சாரிய நால்வர், பன்னிரு திருமுறைச் சுவடிகளுக்கு விசேட பூசை நடைபெற்று அன்னசத்திர ஒழுங்கை பலாலி வீதி ஊடாக வீதி உலாவாகப் புறப்பட்டு யாழ்ப்பாணம் பலாலி வீதி இந்து சமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலுக்கு சென்று விசேட பூசை நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சர்வதாரி வருடம் சித்திரைத் திங்கள் முதலாம் நாள் பன்னிரு திருமுறை முற்றோதல் ஆரம்பமாகும். தினமும் முதலாந்திருமுறை முற்றோதல் காலை, மாலை பூசையைத் தொடர்ந்து நடைபெறும். இதற்கான முழு ஒழுங்கையும் மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்டுள்ளார்.

(202)

## முச்சக்கரவண்டி தடம்புரண்டு இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

முச்சக்கரவண்டி தடம் புரண்டதில் வண்டியின் சாரதியும் அதில் பயணித்தவரும் காயமடைந்தனர். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி, கல்வயலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ரி.வியாசன் (வயது 18) என்பவரும் சாரதியான இ.சுதாகரன் (வயது 17) என்பவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்படனர்.

காலில் பலத்த காயம் ஏற்பட்ட ரி.வியாசன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

(202-207)





# புத்தாண்டு சிறப்பு விற்பனை

SUN TV, KTV, RAJ TV, ESPN, STARSPORTS உட்பட 102 சனல்கள் கண்டு களிக்கக்கூடிய Package க்கள் (ஒருவருட இலவச சந்தாவுடன்)

ரூபா 12 000/=
1 வருட சந்தா மற்றும் Activation Charges உட்பட

- விரையுங்கள் 50 ரிசீவர்கள் மட்டுமே இச்சலுகை விலையில்
- Dish TV க்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்தித் தரப்படும்
- எம்மிடம் கொள்வனவு செய்யும் Dish TV க்குரிய கட்டணங்கள் செலுத்தும்போது 10% விலை கழிவு உண்டு.
- மற்றும் கேபிள் TV க்குரிய அனைத்து உதிரிப்பாகங்களும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.
- கேபிள் TV துறையில் 20 வருட அனுபவமுள்ள SatsTech நிறுவனம், உங்களுக்குச் சரியான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் என்றுமே வழங்கிவருகின்றது.

மேலும் விவரங்களுக்கு:
SATS - TECH ENGINEERS
இல.182, கே.கே.எஸ். வீதி, (குவாலிட்டி சேர் அருகில்)
கொக்குவில் தொ.பே. 021 222 5908


# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 ★ 02 ★ 1932



மறைவு 23 ★ 03 ★ 2007

## அமரர் நாராயணப்பிள்ளை சின்னராசா

திதி:10.04.2008 (வியாழக்கிழமை பஞ்சமி)

ஓராண்டு சென்றாலும் - உன் நினைவுகள் எம்முடைய
ஈரவிழிகளுடன் என்றும் கலந்திருக்கும்
உம் பாச அணைக்கட்டு எம்மனதை விட்டகலாது
எம்மனதில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி. (72938)

## மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு, உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த 30-35 வயதிற்கிடைப்பட்ட மணப்பெண் வேண்டப்படுகிறார். பிறந்த திகதி, நட்சத்திரப்பாதம், குறிப்பு என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும். சீதனம் எதிர் பார்க்கப்படவில்லை.

விளம்பர இல:3080
[illegible]

(72935)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

பருத்தித்துறையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி இன்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## செல்வன் சிறிகுமார்

(மாணவன், ஹாட்லிக் கல்லூரி)

அவர்கள் க.பொ.த.(சா/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி 10A பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர் மேலும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்




முதலியார் லேன்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துபவர்: பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார், அப்பம்மா

# மரண அறிவித்தல்

## முத்தையா பாலசுப்பிரமணியம்

[இளைப்பாறிய உப அதிபர்]



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (08.04.2008) செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - நல்லம்மா தம்பதியரின் அருமை மகனும், ஏழாலை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கரத்தினத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும் இந்திரா (ஆசிரியர் யா/கும்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), பாலகௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலராஜன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பருத்தித்துறை), நடேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அமிர்தாயினியின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அரியமலர், திலகவதி மற்றும் சோதிமலர் இரத்தினபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி.

ஏழாலை தெற்கு. (72952)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சிப் பரீட்சை -1

## வினாத்தாள் II

பின்வரும் பாடலை வாசித்து 1 தொடக்கம் 7 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

பாலைப்போல நிலவு வானில்
பவனிவரப்போகுது,
கோலக்கடல் அலை கைதட்டிக்
குதூகலிக்கப்போகுது,
நீலவானும் கண்சிமிட்டி நின்று
பார்க்கப்போகுது,
மாலைவேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப்போகிறாள்.

01. கவிஞர் நிலவை எதற்கு உவமித்துக் கூறுகின்றார்?
.................................................................
02. கோலக்கடல் அலை கைதட்டிக் குதூகலிப்பது ஏன்?
.................................................................
03. 'மங்கை' என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
.................................................................
04. மேற்தரப்பட்டுள்ள பாடலில் குறிப்பிடப்படும் வினைச்சொல் எது?
.................................................................
05. பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. ..............................
06. அடைமொழிச்சொல் ஒன்று தருக. ..............................
07. இப்பாடலில் நாளொன்றின் எந்தப்பொழுதில் நடைபெறும் நிகழ்ச்சிபற்றிக் கூறப்பட்டுள்ளது? ..............................................

பாடலைக் கவனமாக வாசித்தபின் வினாக்களுக்கு விடையளிக்க.

பள்ளி செல்லுவோம் - நாம்
பாடம் சொல்லுவோம்
துள்ளி ஆடுவோம் - மனத்
துயரை ஒட்டுவோம்
வலிமை அடைவோம் - நல்ல
வாழ்வைக் காணுவோம்
உளியை எடுப்போம் - நல்ல
சிலைகள் வடிப்போம்.

08. இப்பாடலின்படி கவலைகளை நீக்குவதற்கு என்னசெய்யவேண்டும்?
.................................................................
09. சிறந்த எதிர்காலத்தை எதிர்நோக்கும் சிறுவர்களின் உடலும், உள்ளமும் எவ்வாறு இருக்கவேண்டும் என பாடலில் கூறப்பட்டுள்ளது?
.................................................................
10. ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பறையில் ஒன்றாகப் படித்தவரைக் குறிக்கும் சொல் ..............................
11. ஒருவன் தான் வாழ்ந்த, வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கைச் சரித்திரத்தை ஒளிவுமறைவு இன்றி அனைவரும் அறிவதற்காக எழுதும் புத்தகத்தைக் குறிக்கும் சொல் ..............................

பின்வரும் பகுதியை வாசித்து 12 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.

மரக்கிளையின் மேலிருந்த மாம்பழக் குருவியானது, மலரப்போகும் ஒரு மொட்டைப்போலக் காட்சியளித்தது. இடையிடையே தன் தலையை அசைத்து சுற்றும்முற்றும் பார்த்த குருவி, ஆபத்து என எதனும் எதையும் காணவில்லை. எனினும் துரதிஸ்டவசமாக அக்குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. அது சிறிதளவேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால், தன்னை இரையாக்குவதற்கு மிக அருகில் குறிபார்த்திருக்கும் சாரைப் பாம்பைக் கண்டிருக்கும். பழைய தேய்ந்த சைக்கிள்ரயரைப்போன்ற கறுப்பு நிறமான சாரைப்பாம்பு சிறிய பூமொட்டைப்போன்ற மாம்பழக்குருவியை அவ்வேளையில் பிடித்துக்கொண்டது. குருவி கீச்-கீச் என புலம்பியது.

12. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பிராணி சாரைப்பாம்பு ஆகும். இன்னொரு பிராணியின் பெயரை எழுதுக. ....................
13. சாரைப்பாம்பு எங்கே இருந்தது? ..............................
14. சாரைப்பாம்பு என்னசெய்தது என்பதை உமது வசனநடையில் எழுதுக.
.................................................................

பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.
15. பாம்பு - ..............................
16. இரை - ..............................

பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.
17. மேலே - ..............................
18. அருகில் - ..............................

பின்வரும் சொற்களின் பன்மைச் சொற்களை எழுதுக.
19. மொட்டு - ..............................
20. நிறம் - ..............................

அம்மா சந்தையிலிருந்து வாங்கிவந்த ஆறு பைக்கற்றுக்களில் இருந்த உணவுப்பொருட்களும் அளவுகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| பைக்கற்று | அரிசி | சீனி | மா | பிஸ்கற் | கிழங்கு | பூண்டு |
|---|---|---|---|---|---|---|
| நிறை | 10Kg | 5Kg | 2Kg | 200g | 1Kg | 250g |

சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
21. ஆறு பைக்கற்றுக்களிலும் இருந்த மொத்தநிறை எவ்வளவு? (....................)
22. அம்மா வாங்கிவந்த அரிசிக்குக்கொடுத்த தொகையும், சீனிக்குக் கொடுத்த தொகையும் சமனாகும். ஒருகிலோ அரிசியின் விலை 28/= எனின், ஒரு கிலோகிராம் சீனியின் விலை யாது? (....................)
23. அம்மா வாங்கிவந்த பொருட்களில் மிகவும் நிறைகுறைந்த பொருள் எது? (....................)

ஒரு சில்லறைக் கடைக்காரரிடம் உள்ள 5 படிக்கற்களின் நிறைகள் பின்வருமாறு:- 1Kg, 500g, 200g, 100g, 50g
24. கடைக்காரர் 1Kg750g சீனியை நிறுப்பதற்கு எத்தனை படிக்கற்களைப் பயன்படுத்துவார்? (....................)
25. கடைக்காரர் 450g கருவாடு நிறுப்பதற்கு, தராசின் ஒருதட்டில் 500g படிக்கல்லைப் போட்டார். அவர் பொருளுடன்போட்ட படிக்கல்லின் நிறை யாது? (....................)
26. கோலங்களை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான எண்களை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 10 | 17 | 24 | 31 | .... 38 |
| 6 | 11 | .... 16 | 21 | 26 | 31 |
| 64 | .... 32 | 16 | 8 | 4 | 2 |

27. மீன்களை ரின்களில் அடைக்கும் தொழிற்சாலையில் உள்ள இயந்திரம் ஒன்று ஒரு நிமிடத்தில் 60 ரின்கள்வீதம் உற்பத்தி செய்யும். அவ் இயந்திரம் 9 நிமிடங்களில் உற்பத்திசெய்யும் ரின்களின் எண்ணிக்கை யாது? (..................)

அதிபரின் அலுவலகத்தில் இருந்த சில பொருட்களின் நீளமும் அகலமும் தரப்பட்டுள்ளன.

| | பொருள் | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| A | நாட்காட்டி | 20cm | 15cm |
| B | அஞ்சலுறை | 12cm | 10cm |
| C | புத்தக மேலட்டை | 15cm | 8cm |
| D | சிறிய மேசை | 36cm | 24cm |

28. நீளங்களின் ஏறுவரிசையில் பொருட்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட விடையைத் தருக: (..................)

அடைப்புக்குள் இருந்து சரியான விடையைத் தெரிவுசெய்து வெற்றிடங்களைப் பூரணப் படுத்துக.
( மலேரியா, சிறுமீன்களை, தாவரச்சாற்றை, கடுகு, குயில், மஞ்சாடி, தேங்காய், வௌவால், உழுந்து, மிளகு, கழுகு, குவாசியக்கோர், கழிவு நீரை, குன்றிமணி, பப்பாசிவிதை )
29. நாம் உண்ணும் உணவில் புரதம் குறைவதனால் ஏற்படும் நோய் எது?
..........................................
30. நேர்மையற்ற வியாபாரிகள் மிளகுடன் கலப்படம்செய்ய பயன்படுத்தும் பொருள் எது? ..........................................
31. 'பெண் நுளம்புகளே மனித இரத்தத்தைக் குடித்து நோய்களைப் பரப்புகின்றன.' ஆண்நுளம்புகள் எதை உண்டு உயிர்வாழும்?
..........................................
32. முலையூட்டி வகையைச் சேர்ந்தது. ஆயினும், பறக்கக்கூடியது எது?
..........................................
33. முற்காலத்தில் நகைவியாபாரிகள் நகையை அளப்பதற்குப் பயன்படுத்திய வித்து எது? ..........................................

தரப்பட்டுள்ள கருத்துக்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுக.
34. கவர்ச்சியானவை எல்லாம் சிறப்பானவை என்று கருதக்கூடாது.
.................................................................
35. சிறுசெலவுகளில் கவனமாகவும் பெருஞ்செலவுகளில் கவனமின்றியும் இருத்தல். ..................................................
36. கிடைக்காத ஒன்றை எண்ணி ஏங்காது உடனே மறத்தல் வேண்டும்.
.................................................................
37. யாருமற்றவனுக்கு நிச்சயமாகத் தெய்வம் துணையிருக்கும்.
.................................................................
38. பின்வரும் ஆங்கில, சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.
1) Mother அம்மே - ..............................
39. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
ஒபகே சபசனீ(ப்)ப கோஹொமத?
..................................................
40. பின்வருவனவற்றின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
1) காலை வணக்கம் - ..............................

கீழே தரப்படும் விடயம் சார்பாக மேலும் ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

### நான் ஒரு தபாலட்டை

அன்புத்தம்பியே! நீ என்னைப் படித்தபின் மூலையில் எறிந்துவிட்டாயே! நான் உன்னை வந்தடைவதற்குள் பட்ட வேதனைகளை நீ அறிவாயா? உனது அப்பா என்னை தபாலகத்தில் நான்கு ருபா கொடுத்து வாங்கி எனது முன்பக்கத்தில் உனது முகவரியையும், தனது முகவரியையும் எழுதினார். என் முதுகுப்பக்கத்தில் உனக்குப் பல ஆலோசனைகளை எழுதி என்னைத் தபாற்பெட்டியில் சேர்த்தார்.

41. .................................................................
42. .................................................................
43. .................................................................
44. .................................................................
45. .................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்

## மூன்று மாடிக் கட்டடத் திறப்பு விழா (10.04.2008 வியாழக்கிழமை)



தமிழர்களின் தலைநிமிர் கழகமாகவும் இந்துக்களின் இதயத்துடிப்பாகவும் விளங்குகின்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பன்னாட்டுப் பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றிணைந்த சிந்தனையாலும் பெற்ற தாய்க்கு ஆற்றும் அரும்பணிபோல் கற்ற தாய்க்கும் ஆற்றும் தியாகப் பெரும்பண்பின் பங்களிப்பிலும் கட்டப்பட்டிருக்கும் விடுதி மண்டபம், கேட்போர் கூடம், நவீன கணனியகம், மைதானத்தை நோக்கிய பார்வையாளர் கூடம், புதுப் பொலிவுடன் விளங்கும் தேநீர்ச்சாலை என்பவற்றை உள்ளடக்கி நிர்மாணிக்கப்பெற்று தலைநிமிர்ந்து உயர்ந்து நிற்கும் புதிய மூன்று மாடிக்கட்டடம் இன்று (10.04.2008) வியாழக்கிழமை கல்லூரி அதிபர் திரு.வீ.கணேசராசா அவர்களால் திறந்து வைக்கப்பெறும்.

கல்லூரியில் அமர்ந்து திருவருள் பாலிக்கும் சிவஞான வைரவர் ஆலய குடமுழுக்குத் தினத்தை முன்னிட்டு நடத்தப்படுகின்ற 1008 சங்காபிஷேக தினத்தில் கட்டடம் திறந்து வைக்கப்படுவதை நினைத்து வியந்து பூரிப்படைகின்றோம். கல்லூரி அன்னையின் மைந்தர்களின் நெஞ்சத்தில் பெருமிதம் பெருகுகின்றது.

கட்டடப் பகுதியில் மெருகூட்டப்படாமல் எஞ்சியிருக்கும் வேலைத்திட்டங்கள் விரைவில் நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். கல்லூரி அன்னை உரமும் வளமும் பெற வாழ்த்துகின்றோம். மேன்மேலும் புத்தணிகள் அணிந்து பொலிவுறுவாளாக!

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்.**

*அனுசரணை:*

**நாதன் தளபாடத் தொழிற்சாலை**

**ஆனந்தன் கட்டட ஒப்பந்தகாரர்**

**சுந்தர்சன், யாழ்.வீதி, மானிப்பாய்.** (சி/552232)

## நினைவஞ்சலி

8ஆம் ஆண்டு நினைவு | முதலாம் ஆண்டு நினைவு





| அமரர் | திருமதி |
|---|---|
| சிவக்கொழுந்து சுந்தரலிங்கம் | சுந்தரலிங்கம் பொன்னம்மா |

| | | |
|---|---|---|
| 15.10.1931 | மலர்வு | 27.06.1939 |
| 18.01.2000 | உதிர்வு | 23.03.2007 |

எமது வாழ்விற்கு நல் வழிகாட்டிய
எங்கள் அன்புத் தெய்வங்களின்
ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

இணுவில்.

## வடமராட்சியில் ஆங்கில பயிற்சி

பருத்தித்துறை,ஏப்.10

இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் மன்றம் வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும் ''ஹாட்லி இன்ஸ்ரிரியூட்'' கல்வி நிறுவனத்தில் ஆங்கிலக்கல்வி விரிவாக்க கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆங்கில அறிவினை விருத்தி செய்து மேம்படுத்த விரும்பும் அனைவருக்கும் தேவைக்கேற்ப ஆங்கில அறிவினை மேம்படுத்துவதற்கு உதவக்கூடிய ஆங்கில உயர் பயிற்சி நெறிகள், விசேட நோக்கத்தோடு ஆங்கில அறிவினை விருத்தி செய்ய விரும்புபவர்களுக்கு விசேட முறையில் பயிற்சிகள் வழங்கும் கற்கை நெறிகள் ஆகியன ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆங்கிலப் பயிற்சி நெறிகளில் பயிற்சிகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தியுடன் தொடர்பு கொள்ளுமாறு ''ஹாட்லி இன்ஸ்ரிரியூட்'' நிறுவனம் கேட்டுள்ளது. (202-218)

## முதலாம் ஆண்டு நினைவு தினம்

மண்ணில்: 09.06.1971



விண்ணில்:23.03.2007

**அமரர் கிருஸ்ணபிள்ளை யோகநாதன் (மோகன்)**
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

தியாகங்கள் பல செய்தாய் தியாகி ஆனாய்
ஆண்டொன்று போனாலும் எம்மனதில் அமரரானாய்
அன்பாக மோகனென பல பேரும் அழைத்திட்டார்
பண்பாளா நீயில்லை உலகமிங்கே வெறிச்சோடிக் கிடக்குதடா.

(சி/552210)

இன்று (10.04.2008) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதர்கலட்டி, அல்வாய் கிழக்கு, அல்வாய். **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜே.வி.பியின் பிளவால் தெற்கில் பேரினவாதம் இன்னும் தீவிரமாகும்

ஜே.வி.பியின் சிவப்பு நிற இரும்புத் திரைக்குப் பின்னால் நடந்தேறிய குத்துவெட்டு இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டது.

தொண்ணூறுகளுக்கு முந்திய பனிப்போர் காலத்தில் இடதுசாரிகளின் பிடியில் சிக்கிக் கிடந்த சோவியத் யூனியனிலும் பிற சிவப்புச்சட்டை நாடுகளிலும் அரச உயர் மட்டத்தில் நடப்பவை இப்படித்தான் இரும்புத் திரைக்குப் பின்னால் இடம்பெறும் இரகசியங்களாக மறைக்கப்பட்டன.

ஆனால் இன்று பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டது. சோவியத் ஒன்றியத்தின் இரும்புத் திரைகளுக்குப் பின்னால் இறுக்கிக் கட்டப்பட்டிருந்த நாடுகள் தங்களைப் பலவந்தமாகப் பிணைத்து வைத்திருந்த இரும்புச் சங்கிலிகளை உடைத்தெறிந்துகொண்டு தம்பாட்டில் தனித்தனி நாடுகளாகிவிட்டன. சோவியத் ஒன்றியத்தின் இரும்புப் பிடிக்கு முன்னால் மறைக்கப்பட்டிருந்த இரும்புத்திரை இன்று தகர்ந்துவிட்டது.

ஜே.வி.பி. என்ற - இடதுசாரிகள் எனத் தம்மை அழைத்துக் கொள்கின்ற சிவப்புச் சட்டைக் காரர்களின் - கட்சியின் முன்னாலும் இதுவரை இத்தகைய இரும்புத்திரை ஒன்று போடப்பட்டிருந்தது. உள்ளே இடம்பெறும் அக்கிரமங்கள் கட்சிக் கட்டுப்பாடு என்ற பெயரில் மூடிமறைக்கப்பட்டிருந்தன. இப்போது இரும்புத்திரை தகர உண்மை அம்பலத்துக்கு வரத் தொடங்கிவிட்டது.

ஜே.வி.பியும், மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டுச்சேரும் சூழ்நிலை 2005 நடுப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி ஏற்பட்டபோதே அரசியல் பார்வையாளர்களின் நோக்கில் ஒரு பலத்த சந்தேகம் எழுந்தது. தென்னிலங்கையில் ஒரே வாக்குவங்கியில் தங்கியிருக்கும் இரண்டு தரப்புகள் இப்போது ஒன்று சேருகின்றன. பிற்காலத்தில் யாரின் காலை யார் வாருவார்களோ என்ற சந்தேகமே அப்போது அவர்கள் மத்தியில் எழுந்தது. இப்போது அதற்கு ஓரளவு விடை கிடைத்தும் விட்டது.

தவறான ஆட்சி முறையாலும், பிழையான பொருளாதாரக் கொள்கையாலும், ஊழல் - மோசடிகள் நிறைந்த நிர்வாகச் சீர்கேடுகளினாலும் நாட்டைக் குட்டிச் சுவராக்கி நடுவீதிக்குக் கொண்டுவந்த ஓர் ஆட்சிமுறையை, அது தமிழர் விரோத தீவிரப் போர்வெறிப்போக்கைப் பேரினவாத மேலாண்மைத் திமிரோடு கடைப்பிடிக்கின்றது என்ற ஒரே காரணத்துக்காக -

தன்னுடைய பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கக் கொள்கை நிலைப்பாட்டை நிலை நிறுத்துகின்ற ஒரே நோக்கத்துக்காக -

தொடர்ந்தும் இரண்டரை ஆண்டுகளாகக் காவாந்து பண்ணி, காப்பாற்றிய தவறுக்கான - வினைக்கான - பரிசை இப்போது ஜே.வி.பி. அனுபவிக்கின்றது.

இரும்புத் திரை போன்ற இறுக்கமான கட்டுப்பாடு கொண்ட ஜே.வி.பியை சிதிலமடைய வைத்துவிட்டது 'மஹிந்த சிந்தனை'!. ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு மஹிந்த ராஜபக்ஷ குழுமத்தை அரியணையில் ஏற்றியவர்கள் இன்று அந்த அரசின் பின்னணியில் பின்னப்பட்ட வலைக்குள் சிக்கித் தாமே தமக்குள் பிளவுறும் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இதனை ஜே.வி.பி. உணர்ந்துகொள்ளுமா, இனிமேலாவது திருந்திச் செயற்படுமா என்பதே கேள்வி.

வர்க்க அடக்குமுறைக்கும், இன ஒடுக்குமுறைக்கும் எதிராகக் கொதித்தெழும்பும் இயல்பான போக்கு இடதுசாரிகளுக்கு உண்டு.

ஆனால் இடதுசாரிப் போக்கை வரித்துக் கொண்டதாகக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பியோ முழுக்க முழுக்க பேரினவாத மேலாண்மையிலேயே ஊறி நிற்கின்றது. அடக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் எழுப்பும் நேர்மையான இடதுசாரிச் சிந்தனை அதற்கு இல்லவே இல்லை என்பது வெளிப்படை.

இப்போது அந்தக் கட்சி இரண்டாகப் பிளந்து விட்டமை துலாம்பரமாக வெளிப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த இரண்டு பிரிவினருமே தென்னிலங்கையில் தங்களின் வாக்கு வங்கிகளைக் கைப்பற்றிக்கொள்வதற்காகத் தங்களுக்குள் போட்டி போடப் போகின்றனர்.

பௌத்த - சிங்களப் பேரினவாதக் கிளர்ச்சியைத் தூண்டி அதில் அரசியல் நடத்தி, ஆதரவு திரட்டுவதில் ருசி கண்ட இரு தரப்பினருமே அந்த விவகாரத்தையே தொடர்ந்தும் தமது ஆதரவுத் தளத்துக்கான அடிப்படையாகக் கொண்டு செயற்படுவார்கள் என்பதும் இலகுவாக ஊகிக்கத்தக்கதே.

அப்படியாயின், பேரினவாதச் சிந்தனையைத் தூண்டிக் கிளர்ந்தெழவைத்து, அதில் அரசியல் பிழைப்பு நடத்தும் தமது முயற்சிகளில் இந்த இரு பிரிவினருமே இனிமேல் மும்முரமாக ஈடுபடப் போகின்றமையை இனிவரும் காலங்களில் இலங்கை தரிசிக்கப் போகின்றது என்பது திண்ணம்.

அதாவது, ஜே.வி.பிக்குள் இப்போது ஏற்பட்டுள்ள பிளவு - அல்லது இக்கட்சி இரண்டாக உடைந்ததன் விளைவு - நாட்டில் இனவாதத்தைக் கிளப்பி அதில் அரசியல் குளிர்காய்ந்து பிழைப்பு நடத்தும் பேரினவாத சக்திகளை மேலும் முறுக்கேற்றி விடுமே தவிர, அப்போக்கைத் தணிக்காது என்பது நிச்சயம்.

யுத்த வெறியைத் தூண்டி, சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கும் போக்கை வெளிப்படுத்துவதே தென்னிலங்கை வாக்கு வங்கியைக் கவரும் இலகுவான - சுலபமான - வழி என்பதைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் பட்டறிவுப் பாடமாக நன்கு படித்துள்ளதால், இனவாதக் குதிரையிலேயே அவர்களது அரசியல் சவாரி தொடருவது உறுதி.

# பிரதான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாவிடில் புங்குடுதீவில் மக்கள் மீளக்குடியேறும் வாய்ப்பேயில்லை

## மின்சாரம் வழங்கும் நிகழ்வில் பேராசிரியர் குகபாலன்



யாழ்ப்பாணம்,ஏப்.10

புங்குடுதீவு பிரதேசத்தின் பிரதான அடிப்படைத் தேவைகள் உடன்பூர்த்திசெய்யப்பட வேண்டும்.அவ்வாறு செய்யாவிடின் பிரதேச மக்கள் மீளக் குடியேறுவதற்கு வாய்ப்பே இல்லை.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் தெரிவித்தார்.

இதனால் 1960களின் பின்னர் கட்டப்பட்ட பல ஆயிரக் கணக்கான வீடுகள் அழிவுற்று வருவதையும் தடுக்க முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புங்குடுதீவுப் பிரதேசத்திற்கான மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கும் நிகழ்வு கடந்ததிங்கட்கிழமைநடைபெற்றது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மின்பிறப்பாக்கியை சம்பிரதாயபூர்வமாக அழுத்தி மின்விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

இவ்விழாவில் கலந்து உரையாற்றிய பேராசிரியர் குகபாலன் மேலும் தெரிவித்ததாவது:

புங்குடுதீவுக் கிராமத்தில் இன்றைய நிலையில் அவசியம் தேவைப்படுகின்ற அடிப்படைத் தேவைகளை செயற்படுத்தும் பட்சத்தில் மட்டுமே மீள்இடப் பெயர்வின் சாத்தியக்கூறுகளை உருவாக்க முடியும். கடந்த இரு தசாப்தங்களாக மின்சார வசதியினை இழந்து இருள் சூழ்ந்த நிலையில் காணப் பட்ட இக்கிராமத்திற்கு இன்று மின்சார பிறப்பாக்கியினைப் பொருத்தி கிராம மக்களுக்கு ஒளியூட்டிய அரச அதிபர் மற்றும் மின்சாரசபை உயர் அதிகாரிகளுக்கு கிராம மக்களின் சார்பாக நன்றி.

மேலும் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக பராமரிப்பின்றி மக்களின் பாவனைக்குதவாத நிலையில் உள்ள பிரதான வீதியான பெருங்காடு - இறுப்பிட்டி வீதியினை உடன் செப்பனிட்டும் மாவட்ட வைத்தியசாலையாகவிருந்த புங்குடுதீவு ஆஸ்பத்திரிக்கு உடனடியாக நிரந்தர வைத்திய அதிகாரியை நியமிக்கவும் வேண்டும்.

### சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்டும்

தற்போது வழங்கப்படும் மின்சார இணைப்பானது மின் விளக்கினை பெற்றுக் கொள்வது என்பதற்கு மேலாக இப்பிரதேச மக்களின் சமூக பொருளாதார பண்பாட்டு வளர்ச்சிக்கு குறிப்பாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளது. இதற்காக அரும்பாடு பட்டவர் அமரர் பூராசா அவர்களுக்கு இம் மக்கள் சார்பாக நன்றி உதயன்செய்தியால்கிடைத்தபலன்.

அரச அதிபர் தனது உரையில்

புங்குடுதீவுக் கிராம மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளின் ஒன்றை நிறைவு செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்காக அரும்பாடு பட்டு உழைத்த சமூக சேவையாளன் ச.யோ. பூராசாவின்பணி அளவிடற்கரியது. இந்த மின்சாரமானது அரசினதோ அன்றில் அரச அதிபரினதோ சொத் தல்ல. அது மக்களாகிய உங்களது சொத்தே என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். அதாவது இன்று கிடைத்திருக்கும் மின்சாரத்தினை சட்டத்திற்குப் புறம்பான முறையில் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு பயன் படுத்தப்படுவது சமூகத்திற்குச் செய்யும்துரோகம்என்பதையாவரும்உணர வேண்டும். இங்கு இக் கிராம மக்கள் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்உரிய காலத்தில் தீர்த்து வைக்க முயல்வேன் என்றார்.

இவ்விழாவில் வடமாகாண மின்சார பிராந்திய முகாமையாளர், சர்வோதய அமைப்பின்அறங்காவலர்செல்விபொ. ஜமுனாதேவி வேலணை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் கருணா கரகுருமூர்த்தி மற்றும் ஈழமக்கள் ஜன நாயகக் கட்சி முக்கியஸ்தர்கள் புங்குடுதீவுப் பிரதேச சபையின் கடற்படைக் கட்டளைத் தளபதி ஆகியோரும் கலந்து கொண்டனர். (202)

# அரச அதிபரின் ஒழுங்குபடுத்தலுக்கு அமைவாக பண்டத்தரிப்பு சுற்றுவட்டம் ஊடாக 788 பஸ்சேவை

## உதயன் செய்தியால் கிடைத்த பலன்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணம்- இளவாலை 788 இலக்கப் பாதையில் சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் கடந்த திங்கட்கிழமை முதல் பண்டத்தரிப்பு சுற்றுவட்டம் ஊடாக சேவையை ஆரம்பித்துள்ளன. யாழ். அரச அதிபரினால் ஒழுங்குபடுத்தப்பட்டதற்கமைய தாம் சேவையை ஆரம்பித்துள்ளதாக 788 இலக்க தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்தது.

இரண்டு மினிபஸ் சங்கங்களிடையே ஏற்பட்ட சிறு பிணக்குக் காரணமாக 788 இலக்க மினிபஸ்கள் பண்டத்தரிப்புச் சுற்று வட்டத்திற்குச் செல்வது கடந்த சில நாள்களாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இதனால் 788 இலக்க மினிபஸ்கள் பண்டத்தரிப்பு சந்தையுடன் தமது சேவையை மட்டுப்படுத்தியிருந்தன. இதன் காரணமாகப் பயணிகளும், பாடசாலை மாணவர்களும் சிரமங்களை எதிர்கொண்டமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பயணிகள் சுமார் 300மீற்றர் தூரம் வரை நடந்து வந்து பஸ்ஸில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கூட்டம் ஒன்று அண்மையில் யாழ்.அரச அதிபரின் ஏற்பாட்டில் இடம் பெற்றது. மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர், தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். பயணிகளை ஏற்றுவது தொடர்பாக நிபந்தனைகளின் அடிப்படையில் பண்டத்தரிப்புச் சுற்றுவட்டம் ஊடாகச் சேவையை ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. இதனடிப்படையில் இப்போது சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் அரச அதிகாரிகளினால் ஒழுங்குபடுத்தப்பட்ட தற்கு அமைவாகத் தாம் சேவையை தொடர்ந்துள்ளதாகவும் சேவையை மீள ஆரம்பிப்பதற்கு உதவிய பொது மக்கள், மாணவர்கள், பொது அமைப்புக ளின் பிரதி நிதிகள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் 788 இலக்க மினிபஸ் உரிமை யாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

# கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் புது வருடம் தொடக்கம் காலை 8 மணிக்கு சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.10

கொமர்ஷல் வங்கி சாவகச்சேரி கிளையின் வங்கி செயற்பாடுகள் சித்திரைப் புத்தாண்டு தொடக்கம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

இதுவரை வங்கி செயற்பாடுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமானது எனவும், சித்திரைப் புத்தாண்டு தொடக்கம் வங்கியின் வாடிக்கையாளர்கள் நலன் கருதி காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வங்கி முகாமையாளர் எஸ்.வீ.குருபாதம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை வங்கி வாடிக்கையாளர்களுக்கு கைவிசேஷம் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். (202-207)

# இலங்கையில் தொடரும் தாக்குதல்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம்

கொழும்பு, ஏப்.10

இலங்கையில் பொதுமக்கள் பலியாவதைத் தவிர்ப்பதற்கு மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்புகளும் தமது அதிகார வரம்புக்குட்பட்ட அனைத்து விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

தொடரும் மோதலுக்கு பேச்சுகள் மூலம் அமைதி வழியான தீர்வு காண வேண்டும் என்றும் மோதலுடன் தொடர்புபட்ட தரப்புக்களை கேட்டுக் கொள்வதாகவும் ஐ.நா சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது

அமைதியான விளையாட்டு நிகழ்வொன்றில் நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்றும்-

இதில் பலியான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே மற்றும் மெய்வன்மை வீரர்களின் குடும்பங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபை தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் சகலவிதமான வன்முறைகளையும் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஐ.நாவின்அறிக்கை தெரிவிக்கின்றது. (சி)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 29 | 11.04.2008 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: ஷஷ்டி | மு.இ. 08.12வரை |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் |
| | பி.ப.02.21வரை |
| [illegible] | |
| சுபநேரம் : | 06.06 - 07.36 |
| ராகுகாலம் : | 10.36 - 12.06 |

## கடவுளுக்குச் சொந்தம்

*படைக்கப்பட்ட அனைத்தும் பொருள்களும் கடவுளுக்குச் சொந்தம். அனைத்து ஜீவன்களும் கடவுளின் பொறிகளாதலால் அவருக்கே சொந்த மாவார்கள். இத்தகைய மனோபாவத்துடன் நீ கடமைகளை நிறைவேற்ற வேண்டும். தான் இருக்கும் நிலையில் திருப்தி இல்லாததால் மனிதன் துன்பத்தை அனுபவிக்கின்றான். கடந்த காலத்தைப் பற்றி நினைத்துக்கொண்டு எதிர்காலத்தை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டு மனிதன் அமைதியற்று இருக்கின்றான். கடவுள் அன்பின் வடிவமானவர். அன்பு அன்பின் மூலமாகவே அடையப் பெறுவதாகும். அன்புக்கு சந்தேகம் என்பது இல்லை. தெய்வீக அன்பு சுயநலமற்றது. சுயநலம் இருக்கும் இடத்தில் பயம் இருக்கும். அன்புக்குப் பயம் இல்லை. எந்தப் பரிசையும் எதிர்பார்ப்பது இல்லை.*

*அன்பு எல்லோரின் உள்ளேயும் இருக்கிறது. அன்பின் தெய்வீகப் பாதை வழியாக நடந்து செல். உன்னிடம் சுயநலம் நிரம்பி இருக்கும் வரையில் உன்னால் இந்த அன்பை அனுபவிக்க இயலாது. தெய்வீக அன்பு எப்போதும் கொடுப்பதே தவிர வாங்குவது இல்லை. உலகியல் அன்பு எப்போதும் வாங்கிக்கொள்கிறது வழங்கிக்கொண்டே இருக்கின்றது. உலகியல் அன்பு ஒருபோதும் கொடுப்பதில்லை. எப்போதும் பேராசை நிறைந்தும் வாங்கிக் கொள்ளத் தயாராகவும் இருக்கின்றது. எனது கருத்தில் மாறும் உலகில் ஒரே வழியில் அனைத் தும் சொல்லலாகாது. நீ இறைவனிடமிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும். உலகத்துக்குக் கொடுக்க வேண்டும். இந்த வழியைப் பின்பற்றாமல் மனிதன் எப்போதுமே வாங்குவதற்கு ஆசைப்படுகின்றான். என்பதும் கொடுக்கவேண் டும் என்ற ஆர்வத்தின் சுவடு கூட அவனிடம் இல்லை என் பது வருந்தத்தக்கது. இறைவனிடம் பெறுதல் வழமைக்கு அடையாளம், உலகத்தி லிருந்து பெறுதல் வறுமையின் அடையாளம்.*



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் போக்குவதில் மனதார உழைத்த பரந்த மனப்பான்மை உள்ளவர்

## சட்டத்தரணி தங்கராசாவுக்கு நீதிபதி புகழாரம்

வடமராட்சி,ஏப்.10

வடமராட்சி மக்கள் பல்வேறு விதமாகப் பாதிப்புக்குள்ளாகியிருந்தபோது அந்த மக்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சட்டத்தரணி தங்கராசா பெரும் ஈடுபாட்டுடன் மனதார உழைத்தவர். இவரது பரந்த மனப்பான்மை இன்றும் என் நினைவில் நிற்கின்றது.

அண்மையில் காலமான சட்டத்தரணி ந.தங்கராசாவுக்குப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற இரங்கல் நிகழ்வில் உரையாற்றும்போது பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது இரங்கலுரையில் மேலும் கூறியதாவது:

சட்டத்தரணி தங்கராசாவின் இழப்பானது ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். குறிப்பாக வடமராட்சிப் பகுதி மக்களைப் பொறுத்தவரையிலும் அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒன்றாக அமைந்துள்ளது. அமைதியான சுபாவமும் பொறுமையான பக்குவத்தையும் கொண்ட அமரர் தங்கராசா எந்தச் சந்தர்ப்பத்திலும் இன்முகத்துடன் செயற்படும் தன்மை வாய்ந்தவராக இருந்துள்ளார்.

இந்தப் பகுதி மக்கள் தற்போதைய தவநிலை காரணமாகப் பல்வேறுவிதமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் பல சந்தர்ப்பங்களில் எனது சமாதான அறையில் என்னைச் சந்தித்து அந்த மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக சில நடவடிக்கைகளுக்காக மன்றின் அனுமதியை அந்த மக்கள் சார்பில் கோரி நின்றபொழுது நான் அன்னாரின் பரந்த மனப்பான்மையை அறியக்கூடிய சந்தர்ப்பம் பலவேளைகளில் ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு எந்த வித எதிர்பார்ப்புமின்றி உதவி புரிந்து செயற் பட்டு வந்த ஒரு சிறந்த உள்ளம் கொண்ட சட்டத்தரணியை இந்த மக்கள் இழந்துவிட் டார்கள்.

**நீதிமன்றத்துக்கும் பெரிய இழப்பு**

நீதிமன்றின் வேலைப்பளு காரணமாக அவரை மரணவிசாரணை செய்யப் பணித்தபோது, எந்தவித மறுப்பும் இன்றிப் பூரண ஒத்துழைப்பு வழங்கிய ஒரு சட்டத்தரணியை இந்நீதிமன்றம் இழந்திருப்பது ஒரு பாரிய இழப்பு. ஈடுசெய்யமுடியாத இழப்பு.

சுமார் 20 வருடங்கள் சட்டத் தரணியாக அமரர் கடமையாற்றியபோதி லும் அதற்கு முன்னர் கிட்டத்தட்ட 24 வரு டங்கள் அரச சேவையில் பணிபுரிந்துள் ளார். அரச சேவையிலிருந்து ஒய்வுபெற்றுச் சட்டத்துறையில் காலடி எடுத்துவைத்த போதிலும் 20 வருடங்கள் வரையில் ஒழுங்காக, நாணயமாக, மக்கள் மதிக்கத்தக்க வகையில் செயலாற்றி வந்துள்ளார். இவர் தனது காலத்தில் பல்வேறு சமூகத்தொண்டிலும் ஈடுபட்டு மக்களுக்குப் பல்வேறு சேவைகளையும் புரிந்துவந்துள்ளார்.

பல வழிகளிலும் நான் அறிந்த அளவிற்கு மக்களிடம் பணம் பெறுவது ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கவேண்டும் என்று சொல்ல அவர் செயலாற்றியது கிடையாது. தனது குடும்பத்திற்கு வேண்டிய சொத்துகளையோ அல்லது பணத்தையோ சேர்த்து வைத்திருப்பதாக அறியமுடியவில்லை. இத்தகையதொரு சிறந்த அமைதியான, இன்முகமாகக் கடமையாற்றிய சட்டத்தரணியை இந்த நீதிமன்றமும் இந்தப் பகுதி மக்களும் சக சட்டத்தரணிகளும் இழந்துள்ளனர் என்றார்.

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பொ.குமாரசாமி இரங்கலுரையை ஆரம்பித்து வைத்து அஞ்சலியுரையை நிகழ்த்துகையில் கூறியதாவது:

**ஏழைகளின் நண்பனாக உழைத்தவர்**

தம்பசிட்டி மேலைப்புலோலியில் பிறந்த தங்கராசா தம்பசிட்டி மெ.மி.பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் ஹாட்லிக் கல்லூரியில் உயர்கல்வியையும் கற்ற தனது 19ஆவது வயதில் இறைவரித் திணைக் களத்தில் தொழில் புரிந்தார். 24 ஆண்டுகள் நாட்டின் பல பகுதிகளிலும் இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றிய இவர் சட்டப்படிப்பை மேற்கொண்டு 1987இல் சட்டத்தரணியானார். கொழும் பில் சட்டத் தொழில் புரிந்துகொண்டிருக் கும்போது 1998ஆம் ஆண்டு மீளவும் பருத்தித்துறை நீதிமன்றம் செயற்படத்தொடங்கியபோது இங்கு வந்து பணியாற்றினார்.



ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், சதாவதானி கதிரைவேற்பிள்ளை சன சமூக நிலையம், புலோலி பலநோக்குக் கூட்டு றவுச் சங்கம், லயன்ஸ் கழகம் உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து சிறந்த சமூகத் தொண்டினையும் ஆற்றிவந்தார். சட்ட உதவி மன்றத்திற்கும் பல வழிகளிலும் உதவி வந்தார். பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் தாய்ச்சங்கப் பிரதிநிதியாகவும் தெரிவுசெய்யப்பட்டு பணிபுரிந்தார்.

ஏழைகளின் நண்பனாக, கஷ்டப்பட்ட மக்களின் சட்டத்தரணியாக, பொதுத் தொண்டனாக பல பரிமாணங்களில் அமைதியாகச் செயற்பட்டு பங்காற்றிய சட்டத்தரணி தங்கராசாவின் இழப்பு சட்டத்தரணிகள் பற்றாக்குறையால் தடுமாறும் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் இப்பிரதேச மக்களுக்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும் - என்றார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஆகி.அலெக்ஸ்ராஜா மற்றும் சட்டத்தரணிகளும் சமூகமளித்திருந் தனர். (202-236)

# யாழ்.குடாநாட்டு மக்களுக்கு விசேட அடையாள அட்டை

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அடுத்த சில மாதங்களில் விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்த ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார் என அரச இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:

கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்கான பயணத்திற்கு ஆளடையாளத்தை நிரூபிப்பது உட்படப் பல்வேறு நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் புதிய விசேட அடையாள அட்டைகளை விநியோகித்தால் ஆள்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இலகுவாகிவிடும்.

அத்துடன், யாழ்ப்பாணத்திற்குப் பயணம் மேற்கொள்வோரை அடையாளத்தை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை கணினிமயமாக்குவது தொடர்பாகவும் இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விசேட அடையாள அட்டைகள் வழங்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன. இதற்காக சகல மக்களையும் புகைப்படம் பிடித்துள்ளோம். யாழ்.குடாநாட்டில் தற்போது சுமார் ஆறரை இலட்சம் தமிழ் பேசும் மக்கள் உள்ளனர். அவர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# "இன்ரறக்ட்" ஆதரவில் உலக நீர் தினம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி "இன்ரறக்ட்" கழகத்தினரால் உலக நீர் தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக, வவுனியாவளாகவிரிவுரையாளர்கணபதி கஜபதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இன்றைய உலகு எதிர்நோக்கும் நீரியல் ஆபத்துப் பற்றிய கருத்துரைகளை அவர் வழங்கினார். இந்நிகழ்வில் "இன்ரறக்ட்" கழக அங்கத்தவர்களும் பாடசாலையின் ஏனைய மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# விளையாட்டுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஏப்.10

கோப்பாய் கோட்டத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நடைபெறவிருந்த மெய்வன்மைப் போட்டிகள் காலநிலைமை சீரின்மை காரணமாக பிற்போடப்பட்டுள்ளன எனக் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்தார். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.10

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இன்று நடைபெறவிருந்த விளையாட்டு விழா காலநிலை சீரின்மை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என பிரதேச செயலர் தெரிவித்தார். (202-135)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.10

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்திப் விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

கொடியேற்றத்தினத்தன்று காலை 6 மணிக்கு சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலயத்திலிருந்து கொடிப்படம் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.10

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி ஆலயப் பெருந்திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு சித்திரா பூரணை தீர்த்தமும் நடைபெறவுள்ளன. (202)

* * *

நவாலி,ஏப்.10

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (202-100)



கட்டுடை அரசடி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா அன்று 'வாழ்வக' இளைஞர்கள் பஜனை செய்வதைப் படத்தில் காணலாம். (95)

# பல வல்லுநர்களை உருவாக்கும் புனித பணியான ஆசிரியத் தொழிலை மேற்கொள்வதே லட்சியம்

## நாவற்குளியில் கிராமத்திலிருந்து 9ஏசி பெற்ற நித்தியா



கலைப்பிரிவில் கல்வி பயின்று பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் விரிவுரையாளர்களையும் இம்மண்ணுக்குத் தரும் ஆசிரியத் தொழிலை மேற்கொள்வதே எனது புனித இலட்சியமாகும்.

இவ்வாறு கூறுகின்றார் நாவற்குளி தெற்கு (கோவிலாக்கண்டி) அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், சுகாதாரம், சமூகக்கல்வி, சங்கீதம், தமிழிலக்கியம், வணிகக்கல்வி ஆகிய ஒன்பது பாடங்களில் 'ஏ' சித்தியையும் விஞ்ஞானத்தில் 'சி' சித்தியையும் பெற்று தனது கிராமத்திற்கும் தனது குடும்பத்திற்கும் மிகப்பெரும் பெருமையையும் வரலாற்றையும் ஏற்படுத்திய நித்தியானந்தன் நித்தியா.

இவரது கிராமம் தென்மராட்சியிலே மிகவும் பின்தங்கிய ஒரு பிரதேசமாகும். இவரது தந்தையார் ஒரு வியாபாரி. வறுமையின் பிடியிலும் இவரது குடும்பம் அக்கிராமத்திலே கல்வியிலே முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது.

பாடசாலையையும் அக்கிராமத்தையும் பொறுத்தவரை இம்முறை இரண்டு சாதனைகளை இவர் நிகழ்த்தியுள்ளார். அதாவது அப்பாடசாலையில் வரலாற்றில் முதன்முறையாக 9ஏ,சி எடுத்ததுடன் ஆங்கிலப் பாடத்திலும் 'ஏ' எடுத்து சாதனைகளை இவர் படைத்துள்ளார்.

இவரது குடும்பத்தில் மூத்த சகோதரர் கேசாந்த் 8ஏ,பி,எஸ் பெறுபேறையும் மற்றைய சகோதரர் சசியானந்தன் 7ஏ,பி,2சி பெறுபேறையும் அப்பாடசாலையிலேயே முன்னர் எடுத்திருந்தனர். அவர்களது சாதனைகளை இவர் முறியடித்துள்ளார்.

மேலும் இவரது இளைய சகோதரி பாஸ்கரி 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற 5ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து அப்பாடசாலையிலேயே தொடர்ந்து கல்வி பயின்று வருகின்றார்.

தனது கல்வியின் முன்னேற்றத்திற்கு தனது பெற்றோர், சகோதரர்கள், பாடசாலை அதிபர் மற்றும் உயிரினும் மேலான ஆசிரியர்கள் ஆகியோரின் ஊக்கமே பலம் சேர்த்தது எனக் கூறும் இவர் எதிர்காலத்தில் தனது பாடசாலைக்கும் தனது கிராமத்திற்கும் தன்னாலான பெருமளவு உதவிகளை வழங்குவதற்கு முயல்வேன் எனவும் கூறினார்.

இம்மாணவியைப் பற்றி இம்மாணவிக்கு ஆங்கிலப் பாடம் போதித்த ஆசிரியை செல்வி கே.சுவர்ணா கூறுகையில்:

கல்வியில் மிகுந்த ஆர்வமும் பற்றும் கொண்டவர். தாம் கல்வி போதிக்கும் சமயங்களில் எல்லாம் தனக்கு கல்வி சம்பந்தமாக ஏற்படும் ஐயங்களை உடனுக்குடன் கூச்சப் படாமல் கேட்பார்.

அத்துடன் விளையாட்டுத் துறையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அண்மையிலும் பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குழுத் தலைவியாக இருந்து மாவட்ட ரீதியாக வவுனியா சென்று வந்தவர் என்றார்.

# அதிரடிப்படையினர் சூட்டதில் 2 சிப்பாய்களும் ஒரு பொதுமகனும் பலி!

அம்பாறை,ஏப்.10

பொத்துவில் காட்டுப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்களும் ஒரு சிவிலியனும் என மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். மற்றுமொரு இராணுவச் சிப்பாய் காயமடைந்துள்ளார்.

பொத்துவில், கோமாரி காட்டுப் பகுதியில் இராணுவத்தினரும் விசேட அதிரடிப் படையினரும் தனித்தனியாக வெவ்வேறு திசைகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். விசேட அதிரடிப்படையினர் இராணுவத்தினரை அடையாளங் காணாத நிலையில் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று கூறப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர். (அ;2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பங்காளதேஷுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டி

# யூசுப் சதம்; பாகிஸ்தான் அபார வெற்றி!

லாகூர், ஏப்.10

பங்காளதேஷுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 152 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மொகமட் யூசுப் ஆட்டமிழக்காமல் பெற்ற 108 ஓட்டங்கள் அணியின் வெற்றிக்கு பக்க பலமாகவிருந்தது.

பாகிஸ்தான் - பங்காளதேஷ் இடையே 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதலாவது ஒருநாள் போட்டி லாகூரில் நேற்று முன்தினம் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

தொடக்க ஆட்டக்காரர் நஸீர் ஜம்ஷட் 20 ஓட்டங்களிலும், யுனிஸ்கான் ஒரு ஓட்டத்திலும் சல்மான் பட் 33 ஓட்டங்களிலும் விரைவாக ஆட்டமிழந்தனர். இதனால் 18 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 70 ஓட்டங்கள் என்ற நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்ட பாகிஸ்தான் அணியை, 4ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த மொகமட் யூசுப்பும், அணித்தலைவர் சொய்ப் மலிக்கும் காப்பாற்றினார்கள். இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 145 ஓட்டங்கள் எடுத்து அசத்தியது. சொய்ப் மலிக் 85 ஓட்டங்களில் (75 பந்து,7 பவுண்டரி) வெளியேறினார்.

இதன்பின்னர் மிஸ்பா உல்- ஹக், அப்ரிடியின் அதிரடியாட்டம் பாகிஸ்தான் 300 ஓட்டங்களை கடக்க உதவுகரமாக இருந்தது. மிஸ்பா 27 பந்துகளில் ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் 38 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழந்தார். அப்ரிடி 11 பந்துகளில் தலா 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 27 ஓட்டங்கள் விளாசி களத்தில் இருந்தார். இதற்கிடையே மொகமட் யூசுப் தனது 15ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 322 ஓட்டங்களைக் குவித்தது. மொகமட் யூசுப் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்கள் எடுத்தார். கடைசி 10 ஓவர்களில் மட்டும் பாகிஸ்தான் 102 ஓட்டங்கள் குவித்தது குறிப்பிடத்தக்கது.

பின்னர் 323 ஓட்டங்கள் இலக்குடன் பங்காளதேஷ் அணி விளையாடிய போது, இரண்டு முறை மின்சாரம் துண்டிக்கப்பட்டு, மின்விளக்குகள் அணைந்தன. இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதுடன், ஆட்டத்திலும் பாதிப்பு உண்டானது. அதைத் தொடர்ந்து பழுது சரிசெய்யப்பட்டு மீண்டும் ஆட்டம் தொடங்கிய போது பங்காளதேஷ் அணி 39 ஓவர்களில் 282 ஓட்டங்கள் எடுக்கவேண்டும் என்று இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

இதன்படி ஆடிய பங்காளதேஷ் அணி பாகிஸ்தான் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் 29.5 ஓவர்களில் 129 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் 152 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

# ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தைக் கைவிட சர்வதேச ஒலிம்பிக் குழு ஆலோசனை

பீஜிங், ஏப்.10

திபெத் மக்களின் போராட்டம் பல்வேறு நாடுகளிலும் தீவிரம் அடைந்து வருவதால், பீஜிங் ஒலிம்பிக் ஜோதியின் ஓட்டத்தை பாதியிலேயே ரத்துச் செய்வது குறித்து சர்வதேச ஒலிம்பிக் குழு ஆலோசித்து வருவதாக அறியமுடிகின்றது. இதற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. எந்த சக்தியாலும் ஒலிம்பிக் ஜோதியின் உலக பயணத்தை தடுக்க முடியாது எனவும் சவால் விடுத்துள்ளது.

லண்டன், பரீஸைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அமெரிக்காவில் உள்ள சான்பிரான் சிஸ்கோவுக்கு ஒலிம்பிக் ஜோதி சென்ற போதும் திபெத்தியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். பிரபல 'கோல்டன் கேட்' பாலத்தின் 'கேபிள்களில்' சிலர் ஏறி, திபெத்துக்குச் சுதந்திரம் தரும்படி வாசகங்களைக் காட்டினர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட லாரல் சதர்லின் கூறுகையில், ''ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் தொடர்ந்தால், போராட்டமும் நீடிக்கும். திபெத் எல்லைக்குள் ஜோதியை எடுத்துச் செல்ல சர்வதேச ஒலிம்பிக் சங்கம் அனுமதித்தால், ரத்த ஆறு ஓடும்.'' என எச்சரித்தார்.

இப்படி உலகம் முழுவதும் திபெத்தியர்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளதால், பீஜிங் ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தை ரத்துச் செய்வது பற்றி சர்வதேச ஒலிம்பிக் குழு ஆலோசித்து வருகிறது. இது பற்றி இன்று பீஜிங்கில் தொடங்கும் ஒலிம்பிக் குழுவின் செயற்குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது.

இப்பிரச்சினை குறித்து ஒலிம்பிக் குழுவின் துணைத் தலைவர் கினிலா லிண்ட்பர்க் கூறுகையில்,''பீஜிங் ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தை மறுபரிசீலனை செய்ய வாய்ப்பு உள்ளது. தேவைப்பட்டால் 'உலக உலா' ரத்துச் செய்யப்படலாம். எதிர்வரும் காலத்தில் 'உலகம் முழுவதும் ஜோதியை எடுத்துச் செல்வதற்கு அனுமதி மறுப்பது பற்றியும் விவாதிக்க உள்ளோம்.'' - என்றார்.

# இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் முதல் ஒருநாள் போட்டி இன்று

போர்ட் ஒவ் ஸ்பெயின், ஏப். 10

இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலானமுதலாவது ஒருநாள் போட்டி இன்று போர்ட் ஒவ் ஸ்பெயினில் நடைபெறவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள மஹேல ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கைக் கிரிக்கெட் அணி, முதலில் பங்குபற்றிய 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 எனும் கணக்கில் சமனிலைப்படுத்தியது. இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று தொடங்கவிருக்கின்றது.

டெஸ்ட் தொடரில் சிறப்பாகப் பிரகாசித்த இலங்கை அணி ஒருநாள் தொடரிலும் ஜொலிக்கும் என எதிர்பார்க்கலாம். இலங்கை அணி துடுப்பாட்டம், பந்துவீச்சில் சமபலத்தில் காணப்படுகின்றது.

மஹேல உடவத்த - உபுல் தரங்க ஜோடி இலங்கை அணிக்கு சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுக்கப் போராடுவர் என எதிர் பார்க்கலாம். தொடர்ந்து களம்புகுந்து அணியின் தேவைக்கேற்ப ஆட குமார சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண டில்சான் ஆகியோர் அணியில் உள்ளனர்.

வேகப் பந்துவீச்சில் எதிரணியை மிரட்ட சமிந்தவாஸ், இஸரா அமரசிங்க, துஷாரமிராண்டோ ஆகியோர்காத்திருக்கின்றனர். முரளிதரன் இல்லாதமை அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தலாம்.

கிறில் கெய்ல் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி சொந்த மண்ணில் அசத்தக் காத்திருக்கின்றது. அந்த அணிக்குத் துடுப்பாட்டத்தில் கைகொடுக்க சந்தர்போல், சர்வான் சாமுவேல்ஸ் ஆகியோர் உள்ளனர். அதிரடி ஆரம்பத்தை அணித்தலைவர் கிறிஸ் கெயல் பெற்றுக்கொடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

இரு அணிகளும் சமபலத்தை கொண்டுள்ளமையால் ஒவ்வொரு போட்டியிலும் மு[illegible]னரே வெற்றிபெறும் அணியைத் தீர்மானி[illegible] முடியாதுள்ளது.

இரு அணிகளும் இதுவரை 43 ஒருநா[illegible] போட்டிகளில் விளையாடியுள்ளன. அவ[illegible]றில் 18 போட்டிகளில் இலங்கை அணியும் 24 போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி[illegible]யும் வெற்றிபெற்றுள்ளன.

# தம் மீதான தாக்குதல் தொடருமானால் யுத்தநிறுத்தத்திலிருந்து விலகிவிடுவோம் என்று ஈராக்கிய அரசுக்கு சதார் எச்சரிக்கை

பாக்தாத், ஏப்.10

'பாக்தாத்தில் தமது ஆதரவாளர்களுக்கு எதிரான தாக்குதல்களை, அதிகாரிகள் நிறுத்த வேண்டும். இல்லையேல் ஏழு மாதகால பூர்வாங்க யுத்த நிறுத்தம் கைவிடப்பட்டுவிடும்.'

- இவ்வாறு ஈராக்கிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஷியாக்களின் மதகுருவான மொஹட்டா அல் சதார்.

தென் ஈராக்கில் சமீபத்தில் 9 நாட்களாக மொஹட்டாவின் மெஹ்தி போராளிகள் மேற்கொண்டு வந்த தாக்குதல்கள், ஈரானிய ஷியா மதகுருமாரின் தலையீட்டால் நிறுத்தப்பட்டுள்ளன. இந் நிலையில் யுத்த நிறுத்தம் கைவிடப்பட்டால், நிலைமை மீண்டும் மோசமடைந்து விடலாமென, அரசியல் அவதானிகளும் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

எனினும் வடகிழக்கு பாக்தாத்தில் அமைந்துள்ள ஷியா போராளிகளின் கோட்டை என வர்ணிக்கப்படும் சதர் நகரில், அமெரிக்க-ஈராக்கிய கூட்டுப்படைகள் ஷியா போராளிகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்த கெடுபிடிகளால், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் மோதல்கள் தலைதூக்கின என செய்திகள் தெரிவித்துள்ளன.

இம்மோதல்களின் போது, போராளிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தப் பயன்படுத்தும் மூன்று தளங்கள் மீது, அமெரிக்கத் துருப்புகள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தின. இவற்றில் 12 போராளிகள் கொல்லப்பட்டுள்ளார்கள் என, அமெரிக்கக் கட்டளைப் பணியகம் தெரிவித்துள்ளது.

### ஏவுகணைத் தாக்குதலில் 14 பேர் கொலை

சதர் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 37 பேர் காயமடைந்துள்ளனர் என ஈராக்கிய பொலிஸ் வட்டாரமும், மருத்துவமனை வட்டாரங்களும் தெரிவித்துள்ளன. இம் மோதல்களில் இரு அமெரிக்கத் துருப்புகளும் கொல்லப்பட்டுள்ளனரென்றும் அமெரிக்க கட்டளைப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் ஞாயிற்றுக்கிழமை முதல் இடம்பெற்றுவரும் வெவ்வேறான மோதல்களில், இதுவரை 12 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளார்கள். அமெரிக்கத் துருப்புகளால் பாதுகாக்கப்பட்டுள்ள, அதியுயர் பாதுகாப்பு வலயமான பச்சை மண்டலத்தை நோக்கி, நேற்றுமுன்தினமும் போராளிகளால் ரொக்கெட், மோட்டார் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று ஊடகத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இப்பகுதியிலேயே அரசு கட்டடங்களும், தூதரகக் கட்டடங்களும் உள்ளன. செவ்வாயன்று போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் உயிர்ச் சேதமோ, பொருள்சேதமோ, கட்டடச் சேதமோ ஏற்படவில்லை என அமெரிக்கத் தூதரகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2003ஆம் வருட ஏப்ரல் 9ஆம் திகதி ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்து, அப்போதைய சதாம் ஹுஸைனின் ஆட்சியைக் கவிழ்த்தது. அதுமுதல் கடந்த ஐந்து வருடங்களாக, ஈராக்கிய ஸ்திர நிலைப்பாடு தொடர்ந்தும் ஆட்டங்கண்டு வருகின்றது. இதில் காத்திரமான மாற்றமெதுவும் ஏற்படவில்லையென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

## 28 வயதுப் பெண்ணைக் காதலிக்கும் 66 வயதான செக் குடியரசு ஜனாதிபதி

கரசாஸ், ஏப்.10

செக் குடியரசு நாட்டு ஜனாதிபதி 66 வயதில், 28 வயதான விமானப் பணிப் பெண்ணைக் காதலிக்கிறார்.

ஐரோப்பாவில் உள்ளது செக் குடியரசு நாடு. இதன் ஜனாதிபதியாக இருப்பவர் வாக்லவ் கலூஸ். 66 வயதான இவருக்கு மனைவியும் குழந்தைகளும் இருக்கிறார்கள். இப்போது அவர் ஒரு விமானப் பணிப் பெண்ணைக் காதலிக்கிறார். அவர் வயதில் பாதிக்கும் குறைவாக உள்ள அந்தப் பெண்ணின் பெயர் பெட்னரோவா. அவர் வயது இருபத்தெட்டுத்தான்.

அவர்கள் இருவரும் பராக் நகரில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் ஒன்றாக தங்கி இருந்தார்கள். இதை ஒரு பத்திரிகை துப்பறிந்து கண்டு பிடித்து புகைப்படத்துடன் வெளியிட்டது. இருவருக்கும் இடையே காதல் இருப்பதாகவும் அது செய்தி வெளியிட்டது. அத்துடன் பெட்னரோவா கர்ப்பமாக இருக்கின்றார் என்றும் செய்தி வெளியிடப்பட்டி ருந்தது.

இது பற்றி ஜனாதிபதியிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, இருவருக்குமிடையே காதல் இருப்பதை ஒப்புக் கொண்டார். ஆனால் பெட்னரோவா கர்ப்பமாக இருக்கும் செய்தி தவறானது என்று அவர் கூறினார்.

# ஈராக்கிலிருந்து படைகளை மீளப் பெறும் திட்டத்தை இடைநிறுத்துமாறு கோரிக்கை

வாஷிங்டன், ஏப்.10

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளை ஜுலைக்குப் பின்னர் மீளப் பெறுவதற்கான திட்டம் இடைநிறுத்தம் செய்யப்பட வேண்டும் என ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ உயர்மட்டக் கட்டளைத் தளபதி ஜெனரல் டேவிட் பெட்ரேயிஸ், நேற்றுமுன்தினம் அமெரிக்கக் காரங்கிரஸில் பேசும்போது கோரியுள்ளார்.

இவ்வாறு மீளப் பெறும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இதுவரை எம்மால் வெற்றிகரமாக ஈட்டப்பட்டுள்ள இலக்குகளைப் பாதுகாக்க முடியாமற் போய்விடும் என விளக்கியுள்ள ஜெனரல், தற்போது ஈராக்கில் மூண்டுவரும் களநிலை மோதல்களை விவரித்தார். ஈராக்கில் அதன் மக்களுக்கிடையே தலைதூக்கிவரும் வன்முறைகளை ஒடுக்குவதற்கும் அரசியல் நல்லிணக்கப்பாட்டைத் தோற்றுவிப்பதற்கும் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஈராக்கில் பாதுகாப்பு நிலைவரம் அபிவிருத்தியடைந்து வருகிறது. அதன் சொந்தப் படைகளும் சமாளிக்கக்கூடிய திறமையினையும் பக்குவத்தையும் பெற்று வருகின்றன என்றும் அவர் திருப்தி தெரிவித்துள்ளார்.

தற்போது ஷியா போராளிகள் மேற்கொண்டுவரும் மோதல்களைப் பொறுத்த மட்டில் ஈரானே எமது கவனத்தை ஈர்த்துள்ளது. ஈரானே ஈராக்கிலுள்ள ஷியா போராளிகளுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் அளித்து அவர்களை முடுக்கி வருகின்றது. இது தொடர்பாக [illegible] தகவல்களை நாம் பெற்றுள்ளோம் என்றும் ஜெனரல் பெட்ரேயிஸ் [illegible].

# ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவை புறக்கணிக்கும் கோரிக்கையை மறுத்தார் புஷ்

வாஷிங்டன், ஏப்.10

திபெத் பிரச்சினையில் சீனா ஒடுக்குமுறையை கையாள்வதை எதிர்த்து, அந் நாட்டில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் புஷ் கலந்து கொள்ளக்கூடாது என்று ஹிலாரி கிளின்ரன் உட்பட ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்த புஷ், சீனாவில் நடக்கும் ஒலிம்பிக் தொடக்க விழாவில் கலந்து கொள்வேன் என்று அறிவித்துள்ளார்.

திபெத் பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்பதும், ஜனாதிபதியின் கருத்து என்ன என்பதும் தெள்ளத்தெளிவானது. இதை வலியுறுத்துவதற்காக நாம் [illegible] புறக்கணிக்க வேண்[illegible] என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் டோனி பிராட்டோ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சீனாவில் மனித உரிமை மீறப்படுவது குறித்து நாங்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளோம். பேச்சு உரிமை, எழுத்து உரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகியவை சீனாவில் இல்லை என்பதை ஜனாதிபதியும், அவரது ஆலோசகர்களும் சீனாவிடம் எடுத்துக் கூற ஒரு போதும் தயங்கியதில்லை. எனவே ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட வேண்டும். அதில் அமெரிக்க வீரர்கள் பங்கு கொண்டு வெற்றி பெற வேண்டும்.''

-இவ்வாறு டோனி பிரட்டோ கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பீரங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ம... னவரும் ஏனையோரும் தொழில் ... ாண்டிருந்த போது மேற்கொள் ள... தாக்குதலில் சம்பந்தப்பட்ட மீன வர் மரணமானார் என்று அவருடன் பட கில் சென்ற மற்றொருவர் விசாரணையில் தெரிவித்தார்.

இ...ச் சம்பவம் குறித்து விசாரணை செ... எதிர்வரும் 21 ஆம் திகதி நீதிமன் றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலீஸா ருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையின் பின் சட லத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமா றும் உத்தரவிடப்பட்டது.

இ...பவம் குறித்து மேலும் அறிய வருவ...:

குருநகரைச் சேர்ந்த மீனவர்கள் வழமை போல யாழ்.குடாக்கடலில் மீன்பிடிப்பதற் காக நேற்றுக் காலையில் குருநகர் இறங்கு துறையிலுள்ள படையினரிடம் அனுமதி பெற்றுத் தொழிலுக்குச் சென்றனர். கொலை யுண்ட மீனவருடன் மூவர் சிறையா வலைத் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது மீனவர்களை நோக்கி குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் துரை சாந்தன் படு காயமடைந்து உயிரிழந்தார் என்றும் கூறப் பட்டது.

இதைத் தொடர்ந்து இறந்த மீனவரின் உடலுடன் கரைக்குத் திரும்பிய ஏனைய மீனவர்கள் தரையிலிருந்த படையினரின் அனுமதியுடன் யாழ்.போதனா வைத்திய சாலையில் சடலத்தை ஒப்படைத்ததாக மீனவர் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநகர் புதிய கடற்கரை வீதியை வதி விடமாகக் கொண்ட இறந்த இந்த இளம் மீன வரது குடும்பம் மிகவும் ஏழ்மையானதா ம். இவரது தந்தை யாழ்.போதனா வைத் தியசாலையில் நோயாளர் பராமரிப்புக் கடமைபுரிகிறார். (அ-1-51)

A/L - 2010
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
12.04.2008 காலை 8.30
DMI

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்குத் தோல்வியால் விரக்தியடைந்துள் ளதால்தான் புலிகள் இவ்வாறான தாக்குதல் களை நடத்துகின்றனர்.

நாம் கிழக்கில் அடைந்த வெற்றியைப் போல் வடக்கிலும் அடைவோம். அதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது இந்தியாவின் தமிழ் நாட்டில் நெடுமாறன் புலிகளுடன் சேர்ந்து செயற் படுகின்றார். அதற்கு இந்தியா இடமளிக்க வில்லை.

புலிகள் எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றியளிக்காது. மிக விரைவில் அவர் களைத் தோற்கடிப்போம். கிழக்கில் தேர் தலை நடத்தி முழுமையான ஜனநாய கத்தை நிலைநாட்டுவோம் - என்றார்.(சி)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் முகமாலைப் பகுதியில் படையினரை இலக்கு வைத்து விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட சினைப்பர் தாக்கு தலின்போது இராணுவக் கட்டளைத் தள பதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற இத்தாக்குதலின் போது படுகாயமடைந்த கட் டளைத் தளபதி பலாலி இராணுவ வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட் டுள்ளார் எனவும் முகமாலைப் பகுதியின் முன்னணி அரண்களைப் பார்வையிடச் சென்ற போதே அவர் தாக்குதலுக்கு இலக் கானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஏற்றுமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கும் வரி தவிர்ப்புச் சலுகையை தடுத்து நிறுத்தும் முயற்சிகளுக்குப் பின்னால் அரசியல்வாதிகளும் பயங்கரவாதிகளு டன் நட்புறவைக் கொண்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகளும் உள்ளன. - என்று ஜனாதிபதி சொன்னார். (அ-உ)

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறைக்கால
பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
VISUAL BASIC (G.C.E O/L)
Kids Programming (Year3-10)
Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170

## நடைபாதை வியாபாரிகளிடம் வரி அறவிடும் அனுமதி வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.10

புதுவருடத்தை ஒட்டி யாழ்.நகர மையப் பகுதியில் வியா...ார நடவடிக்கையில் ஈடுபட் டுள்ள நடைபாதை வியாபாரிகளிடம் இருந்து வரியோ வா...கையோ பெறுவதற்கு எவருக் கும் அனுமதி வழங்கப்படவில் லை என்று யாழ்.மாநகரசபையின் செயலாளர் அறிவித் துள்ளார். யாருக்காவது வாடகையோ, வரியோ செலுத்தப்படால் அதற்கும் மாநகர சபைக்கும் தொடர்பு இல்லை என்றும் அவர் அறிவித்துள்ளார். (அ-1)

## கிழக்கை அரசு முழுமையாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக் குழுக்களை அரசாங்கம் பயன் படுத்துகிறது.

சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு சென்று ஈழம் வேண்டுமா? இணைந்த சுயாட்சி வேண் டுமா? மஹிந்த சிந்தனை வேண்டுமா? என்று மக்களிடம் கேட்டுப் பாருங்கள். அவர் கள் தமது நிலைப்பாட்டினை கூறுவார்கள்.

தற்போதைய நடைமுறையில் கிழக்கு மாகாணத்தில் 75 சதவீதமான மக்கள் தமிழ் மொழி பேசுபவர்கள். ஆனால் அண்மை யில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனத்தில் ஒருவர் கூட தமிழர் இல்லை.

கிழக்கில் 237 சிங்கள பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கி முக்கிய அரச நிர்வா கங்களில் அவர்களை வேலைக்கு அமர்த்தி யுள்ளீர்கள். இது ஏன்? அங்கு தமிழ் பேசும் மக்கள்தானே வாழ்கின்றனர். எதற்காக சிங்களப் பட்டதாரிகளுக்கான நியமனங் களை அங்கு வழங்கினீர்கள். அங்குள்ள தமிழ் பட்டதாரிகளில் ஒருவருக்குக் கூட நியமனம் வழங்கப்படவில்லை.

### சிங்களக் குடியேற்றமே நோக்கம்

வடக்கு - கிழக்குப் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இத்தேர்தல் நடத்தப்படுகி றது. இந்த மாகாணங்கள் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்துவரும் பாரம்பரிய மாகா ணங்கள் என்பதில் சந்தேகமில்லை.

75 சதவீதமான தமிழ் பேசும் மக்கள் அங்கு உள்ளனர். இந்த விகிதத்தை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சிங் களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படு கின்றன.

இது சட்டவிரோதமான செயற்பாடு. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இனரீதியாகவும் மொழிரீதி யாகவும் தமிழ் மக்களுக்குப் பாகுபாடு காட் டப்பட்டிருக்கின்றது.

கிழக்கில் படையினருக்காக ஆயிரக் கணக்கான வீடுகள் கட்டப்படுகின்றன. முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலும் இந் நடவடிக்கை முன் னெடுக்கப்படு கின் றது.

ஏன் இந்நடவ டிக்கை அங்கு முன் னெடுக்கப்படவேண் டும்? திட்டமிட்ட சிங்களக் குடியேற் றம்தான் உள்நோக் கம்.

முஸ்லிம்கள் சவூதிக்குத் தான் சென்று வாழவேண் டும் என்று பேரின வாதம் கூறுவதை ஏற்கமுடியாது.

அரசு நேர்மை யாகத் தனது கொள் கையை முன்வைக்க வேண்டும். அப் படிச் செய்யாது பிள் ளையான் குழுவின் ஆதரவுடன் பலாத் காரமாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று சர்வதேசத்திற்குக் காட்ட முற்படு வதை ஏற்கமுடியாது.

கருணாவைப் பாவித்து விட்டு அரசு வீசிவிட்டது. இந்தப் பிள்ளையானையும் இப் படித்தான் பயன்படுத்திவிட்டு வீசிவிடும்.

தோடம்பழத்தைப் பிழிந்து சாற்றை எடுத்து விட்டு கோதை வீசுவதுபோல் இந்தப் பிள் ளையானையும் இந்த அரசு நிச்சயம் வீசும்.

தமிழர்களிடம் கேட்டுப் பாருங்கள் - அவர் களுக்கு என்ன வேண்டும் என்று. சர்வ தேச கண்காணிப்பாளருடன் இதை அவர் களிடம் கேளுங்கள். அவர்கள் கேட்பதைக் கொடுங்கள். மாறாக ஆயுதக் குழுக்களுடன் சேர்ந்து பலாத்காரமாக தமிழர்களின் வாக் கைப் பறிக்காதீர்கள்! - என்றார். (அ-சி)

## வீரவன்ஸவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் அவருடைய இந்தக் கட்சி விரோ தச் செயலுக்கு எதிராகக் கட்சி உரிய நட வடிக்கை எடுக்கும். அத்துடன் அவருக்கு எதிராகக் கட்சி ஒழுக்காற்று நடவடிக் கை யொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை, கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஏனையோர் மீதும் ஒழுக்காற்று நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும். - என்றார் அவர்.

பொருளியல்
N.B.கஜீதரன்
பயிற்சிப் பரீட்சை
காலம் : 11.04.2008 (Fri.) 8.00a.m
விடயம்: சமன்பாடு, வரைபடம், கணக்குகள்
இடம் : நாவலர், விக்னா
Note: வெளிமாணவர்களும் பரீட்சையில் தோற்றமுடியும்

நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2010
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் 12.04.2008 சனி காலை 8 மணி

| | |
|---|---|
| பொருளியல் - N.B.கஜீதரன் | கணக்கீடு - A.பகீரதன் |
| வணிகக் கல்வி - V.K.ரவிகரன் | தமிழ் - A.K.கீர்த்திராஜன் |
| புவியியல் - N.பாபு | அளவையியல் - P.கமல் |
| இந்து நாகரிகம் - S.பத்மராஜா | அரசியல் - A.K.றொபின்சன் |
| கிறிஸ்தவம் - S.ஜெபநேசன் | நாடகம் - M.மயூரன் |
| வரலாறு - பத்மன், S.சுதன் | ஆங்கிலம் -K.Ramanathasan |

ஓர் புதிய ஆலம் விழுது
ஆலமரத்தின் பலம் அதன் விழுதுகளில்
வியாபார நிறுவனத்தின் பலம் அதன் கிளைகளில்
எமது பலம் வாடிக்கையாளர்களாகிய உங்களில்
ஆம்! புதிய விழுதாக நெல்லியடியில் எமது கிளை

INVITATION
We cordially invite
you and your circumstances
for the occasion of
OUR NEW BRANCH
opening ceremony
On 11-04-2008 Friday at 09:45am
Headed by an Indian Engineer
Genuine for Real Warranty

WE ARE NOT BIG BUT THE BEST
Persons with Technically Qualified
மனோகரா சந்தி
UNIT
Central school Road, Nelliady, Karaveddy.
347, K.K.S Road, Jaffna
☎4590720, 2228844

N.C.A கல்வி நிலையம்
கே.கே.எஸ் றோட், இணுவில்.
அமைதியான சூழலில்
O/L DAY CLASS
பிரிவு II
ஆரம்பம்: 11.04.2008
வெள்ளி 8.00 மணி

மது கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
ஆரம்பம்: 10.04.2008
காலை 08-01 மணி வரை
நிர்வாகியின் முழு நேரக் கண்காணிப் புடன் வகுப்புகள் நடை பெறும்.

34 வருட சேவையில்
நாளை ஆரம்பம்(இரு இடங்களில்)
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம்: 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கிளை :417 , கே.கே.எஸ்.றோட் (யாழ்.இந்துக் கல்லூரி அருகாமையில்)
பிரிவு 3
O/L DAY CLASS (8.30-2.30)
ஆரம்பம்: 10.04.2008 8.30 வெள்ளி
* வகுப்புகளுக்கு தனித்துவமும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர் குழு.
* மாணவர்களினதும் பெற்றோர்களினதும் நன்மதிப்பை பெற்ற ஒரே நிறுவனம்.
* தூர இடத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு விடுதி வசதி.
* பஸ்ஸில் வரும் மாணவர்கள் ஸ்ரான்லி வீதியால் நடந்து வரவும்.
* துவிச்சக்கர வண்டியில் வரும் மாணவர்கள் நிறுவனத்துக்கு முன்னால் உள்ள சிறாம்பியடி ஒழுங்கையால் வரவும்.

35 வருடங்களாக
1973 - 2008
தனித்துவம் பெற்ற நிறுவனத்தில்
O/L Day Class
ஏப்ரல் 10 இல் ஆரம்பம்
காலை 8.00 - பி.ப 1.00 வரை
The Express Institute
Irupalai, Kopay.

மிதிவெடி விழிப்புணர்வுக் காலம்: ஏப்ரல் 1 - 14
மிதிவெடி பிரதேசங்கள் என அடையாளமிடப்பட்ட
பகுதிகளை அவதானித்து தவிர்த்து நடப்போம்.
சர்வோதயம்
யுனிசெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.